Registered as a Newspaper.

பக்கங்கள்: பத்து

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆனி 18 ஹிஜ்ரி 1427 ஜ ஆகிர் 04 (03.07.2006) திங்கட்கிழமை இதழ் 275

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# வன்முறை சூழலுக்கு மகிந்தவே காரணம்!

## அன்ரன் பாலசிங்கம் குற்றச்சாட்டு

புதுடெல்கி

இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் வன்முறை மிகுந்த சூழ்நிலைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவே முழுக்காரணம் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.


இந்தியாவிலிருந்து வெளியாகும் என்.டி.ரிவி தொலைக்காட்சிக்கு அன்ரன் பாலசிங்கம் வழங்கிய பேட்டியின் பிறிதொரு பகுதியை அந்தத் தொலைக்காட்சி தற்போது வெளியிட்டுள்ளது.

அதில் அவர் தெரிவிக்கையில்

இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் உத்தியோகபூர்வமற்ற -மென்தீவிர யுத்தத்துக்கு மகிந்த ராஜபக்ஷவின் கடும்போக்கே காரணம். அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தால், இராணுவத்தினரை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் படியும், அவர்கள் புரியும் படுகொலைகளை நிறுத்த ஆக்கபூர்வமான, உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்துவேன்.

ஆயுதக்குழுக்களின்

(10 ஆம் பக்கம் பார்க்க)



## பொறிவெடியில் சிக்கி சிப்பாய் படுகாயம்

கொழும்பு

மட்டக்களப்பு - வாழைச்சேனையில் மர்மப் பொதி வெடித்ததில் படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை 9 மணியளவில் வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் - சந்தேகத் துக்கிடமான பொதி ஒன்றைச் சோதனையிடமுற்பட்டபோது, அது வெடித்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச், சம்பவத்தில் காயமடைந்தவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

## ஓட்டோ புரண்டு இளம்பெண் பலி!

யாழ்ப்பாணம்

நவாலி சந்தியில் ஓட்டோ ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதில் அதில் பயணம் செய்த இளம்பெண் ஒருவர் பலியானார்.

நேற்றுமாலை 4.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

நவாலி வீதியில் வேகமாக வந்து கொண்டிருந்த ஓட்டோ நவாலி சந்தியை அண்மித்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதாகத் தெரியவருகிறது. இந்தச் சம்பவத்தில், நாவலர் வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த அன்ரன் சுகந்தினி (வயது - 24) என்பவரே உயிரிழந்தவராவார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பணிப்புறக்கணிப்பு இன்றுடன் நிறுத்தம்!

யாழ்ப்பாணம்

கடந்த வாரம் முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுவந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் க.பொ.த சாதாரணதரப்பரீட்சை மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலனைக் கருத்தில்

இது தொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்றுவரும் படுகொலைகள், கைதுகள், சித்திரவதைகள் போன்ற இராணுவ அராஜகங்களை உடன்

## படையினர் மீது நேற்றும் கிரனேட் தாக்குதல்கள்!

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டில் படையினர் மீதும் நேற்றும் கிரனேட் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக தெரிய வருகிறது.

நேற்று மாலை 5 மணியளவில் கொக்

கம் நடத்தினர்.

இதன் போது 63 வயதான சோமசுந்தரம் முத்துராஜா என்ற யாழ்.பிறவுண் வீதியைச் சேர்ந்த வயோதிபர் காலில் படுகாயம் அடைந்தார்.

யாழ்ப்பாணம்

கடந்த வாரம் முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுவந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் க.பொ.த சாதாரணதரப்பரீட்சை மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இன்றுமுதல் நிறுத்தி வழமை போன்று அனைத்து செயற்பாடுகளையும் ஆரம்பிக்குமாறு யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய தொழில் சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்றுவரும் படுகொலைகள், கைதுகள், சித்திரவதைகள் போன்ற இராணுவ அராஜகங்களை உடன் நிறுத்துமாறு கோரி எம்மால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டம் கடந்த மாதம் இடம்பெற்று முடிந்த க.பொ.த உயர்தரப்பரீட்சையைக் கருத்தில் கொண்டு தற்காலிகமாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டில் படையினர் மீதும் நேற்றும் கிரனேட் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக தெரிய வருகிறது.

நேற்று மாலை 5 மணியளவில் கொக்குவில் சந்தியில் இராணுவ ரோந்து அணிமீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார். இதையடுத்து படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.

இதன் போது 63 வயதான சோமசுந்தரம் முத்துராஜா என்ற யாழ்.பிறவுண் வீதியைச் சேர்ந்த வயோதிபர் காலில் படுகாயம் அடைந்தார்.

இதேவேளை அந்தப்பகுதியில் உடனடியாக படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதுடன் பொதுமக்கள் பலரும் தாக்குதலுக்குள்ளாகினர்.

சம்பவம் நடைபெற்றபோது காங்கேசன்துறை வீதி வழியாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள ஊடகவியலாளர் தெகிவளையில் படுகொலை

கொழும்பு



கொல்லப்பட்ட ஊடகவியலாளரின் சடலம்

இராணுவப் புலனாய்வுத்துறை தொடர்பாக கடும் விமர்சனங்களை வெளியிட்டு வந்த - சிங்கள ஊடகவியலாளரான லக்மல் சம்பத் தெகிவளையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 9மணியளவில் வந்த தொலைபேசி அழைப்பு ஒன்றையடுத்து வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற பின்னர் பொரலஸ்கமுவவைச் சேர்ந்த சம்பத் லக்மன் டி சில்வா (வயது23) என்ற ஊடகவியலாளர் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

தெகிவளை - ஜெயவர்த்தன வீதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இவரது சடலம் துப்பாக்கி சூட்டுக்கு காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டது. சிங்கள ஊடக உலகின் பிரபல எழுத்தாளரான சம்பத் - இராணுவப்புலனாய்வுத் துறையில் உள்ள ஒட்டைகள் குறித்தும் இராணுவக் கட்டமைப்பின் பல்வேறு மட்டங்களில் நடைபெற்றுவரும் லஞ்ச முறைகேடுகள் பற்றியும், பாதாள உலகக்கும்பல்களுடன் அவற்றுக்கு உள்ள தொடர்புகள், அவற்றின் நடவடிக்கைகள் பற்றியும் பத்திரிகைகளில் துணிச்சலாக எழுதிவந்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கடத்தப்பட்டவர் சடலமாக மீட்பு

திருகோணமலை

திருமலை - மூதூர் நாவலடிச் சந்தியில் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

ராஜு என்று அழைக்கப்படும் சிவசுப்பிரமணியம் சுவாகரன் (வயது40)

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வெலி ஓயாவில் 2 படையினர் காயம்

கொழும்பு

வெலிஓயா-கொக்குத்தொடுவாயில் இராணுவத்தினரின் முன்னரங்க காவலரண்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு படையினர் காயமடைந்தனர்.

இது தொடர்பாக இராணுவத் தலைமையகம் தகவல் வெளியிடுகையில் -

கொக்குத்தொடுவாயிலுள்ள முன்னணி நிலைகள் மீது மூன்று தடவை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படையைப் பலப்படுத்த அமெரிக்க, இஸ்ரேல் உதவி

## இலங்கை அரசு கோருகிறது



கற்பிட்டியில் ரோந்துக்குப் புறப்படும் கடற்படைப் படகு

கொழும்பு

கடற்படையைப் பலப்படுத்துவது தொடர்பாக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளின் உதவியை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

கடற்படைக்குத் தேவையான கனரக பீரங்கிகளை அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளிலிருந்து வாங்குவதற்கே அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அமெரிக்காவுக்கு விஜயம் செய்த பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ-அமெரிக்காவிடமிருந்து புஷ் மாஸ்ரர் 44 ரகத்தைச் சேர்ந்த பீரங்கிகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக பேச்சுக்களை நடத்தியிருக்கிறார். இலங்கைக் கடற்படைக்கு தேவைப்படும் இந்த பீரங்கிகளை வழங்க அமெரிக்கா இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புஷ் மாஸ்ரர் பீரங்கித் தொகுதி ஒன்றை 2 லட்சத்து 45 ஆயிரத்து 275 டொலருக்கு வழங்க அமெரிக்கா


(10 ஆம் பக்கம் பார்க்க)



# உலகக் கிண்ணம் - 2006

# நினைத்தோமா இது நடக்குமென்று





பிராங்போர்ட் —

உலகக்கிண்ண இறுதிப்போட்டிகளிலிருந்து பிரேசில் வெளியேறியது என்பது ஒன்றும் சாதாரண செய்தியல்ல. ஆனால் அசாதாரண செயற்பாடொன்றைச் செய்து அசத்தியிருக்கிறார்கள் பிரான்சியர்கள். சினடென் சிடேன் எத்தகைதொரு வீரர், எத்தகையதொரு அணித்தலைவர் என்பதை கச்சிதமாக நிரூபித்துள்ளார். இந்த ஆட்டத்தில் பிரேசிலைவிட எல்லாவகையிலும் பிரான்ஸ் தூக்கலாகவே காணப்பட்டது என்பது உண்மை.

சுற்றுப்போட்டிகளில் ஆரம்பம் பிரான்ஸுக்கு அவ்வளவு வாய்ப்பாக இல்லாவிட்டாலும், உச்சகட்டத்தில் பிய்த்து எறிகிறார்கள் பிரான்ஸியர். முதல் அரைப்பகுதியில் பிரேசிலின் விளையாட்டைவிட பிரான்ஸின் விளையாட்டுத் திறன் மிகுந்திருந்தது. அதேவேளை, இடைவேளையின் பின் பிரான்ஸ் தன் ஆட்டவேகத்தை இன்னும் அதிகரிக்கவே பிரேசில் ஆடித்தான் போய்விட்டது.

பிரேசிலின் பிரபல்யமான பெயர்களை எல்லாம் சிடேன், தியரிஹென்றி, வியரா முதலிய பெயர்கள் பின்தள்ளிவிட்டன. தியரி ஹென்றி 57 ஆவது நிமிடத்தில் அடித்த இந்த ஒரு கோல் உலக அபிப்பிராயத்தையே தலைகீழாக மாற்றிவிட்டது.

தற்போதுள்ள நிலையில் இரண்டு அரையிறுதி ஆட்டங்களிலும் ஐரோப்பிய அணிகளே ஆடப்போகின்றன. உலகக்கிண்ண போட்டிகள் வரலாற்றில் அரையிறுதிப்போட்டிக்கு நான்கு ஐரோப்பிய அணிகளே தகுதி பெற்றிருப்பது இது நான்காவது முறையாகும். 1934, 1966,1982 இருப்பின் 2006 இல் நான்கு ஐரோப்பிய அணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

1998 இல் பிரேசிலும் பிரான்ஸும் உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் பிரேசில், பிரான்ஸிடம் தோல்வியுற்றது. அதன் பின்னர் தொடர்ச்சியாக பதினொரு ஆட்டங்களில் வெற்றி கண்ட பிரேசில் தற்போது 2006 இல் மீண்டும் ஒருமுறை பிரான்சிடம் கவிழ்ந்திருக்கிறது.

1998ல் இறுதிப் போட்டியில் 3:0 என்று பிரான்ஸ் பிரேசிலைத் தோற்கடித்திருந்தது.


இன்னொருபுறம் பிரான்ஸின் பிளாட்டினி உலகக்கிண்ணப் போட்டிகளில் ஐந்து கோல்கள் போட்டு முதன்மை பெற்றிருந்தார். இப்போது பிரேசிலுக்கு எதிராக ஒரு கோல் போட்டதன் மூலம் தியரி ஹென்றி ஆறு கோல் போட்டு முதன்மையடைகிறார்.

ஆனால் ஒட்டுமொத்த முதன்மை பெறுவதென்றால் 1958 இல் பதின்மூன்று கோல் போட்ட ஜஸ்ட் பொண்டேனின் சாதனையை முறியடிக்கவேண்டும்.

இந்த நிமிடத்தில் யாரைப்பற்றிக் பேசுகிறார்கள் என்றால் பிரான்ஸ் அணியைப்பற்றித்தான் பேசுகிறார்கள். பிரான்ஸின் வெற்றி அற்புதமானது. அதிலும் சிடேனே இந்த நட்சத்திரங்களுக்கே ஒளிகொடுக்கும் நட்சத்திரம்.

இதெல்லாம் மறுப்பில்லாமல் ஒப்புக்கொள்ளப்பட்டாலும், பிரேசிலின் தோல்வியால் யாழ்ப்பாண பிரதேசத்தில் பிரகடனப்படுத்தப்படாத சோகம் ஒன்று புகைமூட்டமாக கவிழ்ந்து போயிருப்பதை மறுக்கவும் முடியவில்லை, மறைக்கவும் முடிய வில்லை.





## சாம்ராஜ்ஜியம் சரிந்துபோயிற்று







ஜெல்சென்கிர்சன் —

எல்லோருக்கும் இங்கிலாந்து நாட்டின் நாற்பது வருடக் கனவொன்று பற்றி தெரிந்திருந்ததே ஒழிய, போர்த்துக்கல்லுக்கும் கனவுகள் இருக்கும்தானே என்று சிந்திக்கமுடியாமற்போயிற்று.

இங்கு ஜேர்மனியில் முன்னே செல்லும் பாதையைத் திறந்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள். அதனை இப்படியும் சொல்லலாம் -

பெனால்டி SHOOT OUT இல் போர்த்துக்கேய கோல்காப்பு வீரர் ரிக்காட்டோ - தனது அற்புதமான கோல் காப்புத் திறமையால் கோல் கதவுகளை மூடிவிட, இங்கிலாந்துக்கான கதவுகள் மூடப்பட்டுப்போயின. போர்த்துக்கல்லுக்கான கதவுகள் திறந்துகொண்டன என்று கூறலாம்.

இங்கிலாந்துக்கும் போதாத காலம். அணித்தலைவர் இடைவேளையை அண்டி காயத்துடன் வெளியேறுகிறார். போதாக்குறைக்கு ஏறத்தாழ ஒரு மணித்தியாலயம்வரை ரூணி இல்லாமல் விளையாடவேண்டிய நிலை. அதற்கப்பால் போர்த்துக்கல் அணியின் திட்டமிட்ட விளையாட்டு.


இருந்தும் பத்துப்பேருடன் இங்கிலாந்து ஒரு கோல்கூடப்போடவிடாமல் சமாளித்தது பெரியதொரு விடயம் தான். ஆனால், பெனால்டி முறையில் 3:1 என்று போர்த்துக்கல் அரையிறுதிப் போட்டிக்கான அடித்தளத்தை இட்டுக்கொண்டது.

இங்கிலாந்தின் பயணம் தடைப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாகவே இங்கிலாந்தின் பயிற்றுனர் ஸ்வென் கொரான் எரிக்சன் தனது பதவியை இழக்கிறார். இவர் இங்கிலாந்தை அதிஉச்சத்துக்குக் கொண்டு போவதற்கு சகல முயற்சிகளையும் எடுத்தார். ஆனால், துன்பத்துடன் விடை பெறுகிறார்.

2006 உலகக்கிண்ணப் போட்டிகளில் பெனால்டி முறையில் தீர்வு காணப்பட்ட மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும். இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் மூன்று தடவைகள் பெனால்ரி முறையில் முடிவை நிர்ணயிப்பதில் சம்பந்தப்பட்டு மூன்று முறையும் தோல்விகண்ட நாடுகளாக அமைகின்றன.

எது எவ்வாறாயினும், இங்கிலாந்து இன்னும் நான்காண்டுகள் தனது கனவை நனவாக்கக் காத்திருக்கவேண்டும். அடுத்து போர்த்துக்கல் சந்திக்கப்போவது பிரான்ஸ் அணியை.

பிரான்ஸ் அணி காலிறுதிப்போட்டியில் சாதித்துவிட்டு இன்னும் சாதிக்க




வேண்டும் என்ற தாகத்துடன் சிலிர்த்துக்கொண்டு நிற்கிறது. நாலாம் திகதி முதல் அரையிறுதியாட்டம். ஐந்தாம் திகதி போர்த்துக்கல், பிரான்ஸ் ஆட்டம். இவர்களில் அடுத்த கட்டத்துக்குச் செல்லப்போகும் ஐரோப்பியர் யார்.

இறுதிப்போட்டியில் வெற்றிபெறப் போகும் ஐரோப்பிய அணி எது. ஊகங்களுக்கு இடம்கொடுக்கமுடியாத அளவுக்கு எதிர்பாராத திசைகளில் 2006 FIFA போட்டிகள் சென்று கொண்டிருக்கின்றன. கண்விழித்திருந்து பார்ப்போம்.

## புரட்சி செய்துதான் விட்டார்கள்

பிராங்போர்ட் —

பிரேசில் - பிரான்ஸ் நாடுகளுக்கு இடையிலான காலிறுதியாட்டம் பிரான்ஸ் அணிக்கு பெரும் எழுச்சியான தாகவே இருந்தது. 1998 இல் பிரேசிலைத் தோற்கடித்து கிண்ணம் வென்றவர்கள்.

ஆனால் 2002 இல் முதல் சுற்றிலேயே வெளியேறியவர்கள். 2006 இல் முதல் சுற்றில் இரண்டாம் இடம் பெற்று அடுத்த கட்டத்திற்குள் நுழைந்தவர்கள். இப்பொழுது எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட பிரேசிலைத் தோற்கடித்து அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள்.



பிரான்ஸ் அணித்தலைவர் சினாடென் சிடேன் மிக அருமையானதொரு வெற்றி இதென்று கூறுகிறார். செய்யவேண்டிய நேரத்தில் சரியாக செயற்பட்டு வெற்றியை அடைந்திருக்கிறோம். மிகவும் கவனமாக அவதானித்து விளையாடினோம். இதனைத் தொடர்ந்து முன்னெடுக்க முயற்சி செய்வோம் என்கின்றார் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட இவர்.

சிடேன் விளையாடும் இறுதியான உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டி இதுவாகும். இவர் சாதித்துவிட்டு செல்வதையே விரும்புவார்.

பயிற்றுநர் றேமன்ட் டொமனேஷ் இந்த வெற்றி விபரிக்க முடியாதது என்கிறார். போர்த்துக்கல் அணியைச் சந்திக்கும்போது அது இலகுவானதாக இருக்கப்போவதில்லை என்பது உண்மையே. ஆனால், இந்த நிமிடத்தைக் கொண்டாடத்தானே வேண்டுமென்கின்றார் அவர்.

ஒரே ஒரு கோலை பிரான்சுக்காகப் பெற்றுக்கொடுத்த தியரி ஹென்றி கருத்துக் கூறும்போது -

நாங்கள் யாருடைய வெற்றியையும் பறித்தெடுக்கவில்லை. எமக்குரியதையே வெற்றிகண்டோம். 2002 இல் நடைபெற்ற சம்பவங்கள் போலன்றி நாங்கள் இலகுவில் வீழ்த்தப்பட முடியாதவர்கள் என்பதை நிரூபிக்க விரும்புகின்றோம் என்கிறார் தியரி ஹென்றி.

# பெயரளவில் மட்டும் இயங்கும் பயங்கரவாத விசாரணை பிரிவு

## சிங்களப் பத்திரிகை விசனம்

கொழும்பு —

பொலிஸ் தலைமையகத்துடன் இணைத்து நிறுவப்பட்டுள்ள பயங்கரவாத விசாரணைப்பிரிவு பெயரளவில் மட்டும் இயங்கி வருவதாகவும் அங்கு பணிபுரியும் அதிகாரிகளுக்கு எந்தவித பணியும் வழங்கப்படவில்லையெனவும் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பயங்கரவாத விசாரணைப் பொலிஸ் பிரிவானது 1998 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரினதும் பொலிஸ் அதிகாரி ஒருவரினதும் கண்காணிப்பின் கீழ் இந்தப் பிரிவு செயற்படுகிறது.

உதவி பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட 113 அதிகாரிகள் பணி புரிகின்றனர். 2002 ஆம் ஆண்டிலிருந்து இதில் இருக்கும் அதிகாரிகளுக்கு எவ்வித பணியும் வழங்கப்படவில்லை.

நாட்டில் ஏனைய இடங்களில் கைது செய்யப்படும் விடுதலைப்புலி சந்தேக நபர்களை விசாரணைகளுக்காக ஒப்படைப்பது தவிர கடந்த காலங்களில் கொழும்பிலும், கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலும் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவங்கள் பற்றிய எந்த விசாரணைகளுக்கும் இந்த பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

அங்கு பணியாற்றிய அதிகாரிகள் சிலரும் அங்கிருந்த வாகனங்கள் சிலவும் வெளிநாட்டு பிரமுகர்களுக்கான பாதுகாப்புப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 4 தமிழ் இளைஞர்கள் மூதூரில் கடத்தல்!

திருகோணமலை —

திருகோணமலை - மூதூர் பகுதியில் 4 தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டனர்.

இறால்குழி - நாவலடிக்கு இடையே படகுச் சேவையில் தொழிலாளியாகக் கடமையாற்றிவரும் இறால்குழியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுதாகரன் (வயது 25) என்பவர் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் மூதூர் இறங்குதுறைக்குச் சென்று கொண்டிருந்த வேளை ஓட்டோ ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டனர்.

இதேவேளை - மூதூர் நகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை மோட்டார் சைக்கிளில் சென்ற மல்லிகைத்தீவைச் சேர்ந்த இருவரும், சம்பூரிலிருந்து மூதூருக்குச் சென்ற மேலும் ஒருவரும் கடத்தப்பட்டதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவித்தன.

எனினும், கடத்தப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. (10,04)

# மீண்டும் நாடெங்கும் வீதிச் சோதனைகள்!



கொழும்பு —

கடந்த காலங்களில் தளர்த்தப்பட்டிருந்த வீதிச் சோதனைச் சாவடிகளை மீண்டும் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக வடக்கு - கிழக்கில் அதிகரித்துவருகின்ற வன்முறைகள் காரணமாகவே இந்த நடைமுறை மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டிலுள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த சோதனைச்சாவடிகளை கடந்து செல்வோர் மற்றும் வாகனங்கள் என்பன தீவிர சோதனைக்குட்டுத்தப்பட்ட பின்னரே பயணம் செய்ய அனுமதிக்கப்படும் என இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

# இலங்கையில் அனைத்து இனங்களுக்கும் நியாயமான உரிமைகள் வழங்கவேண்டும்

## கனேடிய பிரதித்தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு —

ஐக்கிய இலங்கை-என்ற கட்டமைப்புக்குள் அனைத்து இன மக்களது நியாயபூர்வமான உரிமைகள் அளிக்கப்பட வேண்டும் என்று இலங்கைக்கான பிரதி கனேடியத் தூதுவர் ராகேல் டெட்லிங்டன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற கனேடிய நாள் நிகழ்வில் அவர் பேசியதாவது -

இணைத்தலைமை நாடுகள், நோர்வே மற்றும் கண்காணிப்புக் குழுவினருக்குப் பின்னாலும் குறிப்பாக வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர இலங்கையருக்குப் பின்னாலும் நாம் நிற்கிறோம்.

விடுதலைப் புலிகள் அனைத்து பயங்கரவாத செயற்பாடுகள் மற்றும் வன்முறைகளை நிறுத்த வேண்டும். சமாதானப் பேச்சுக்களுக்கு மீண்டும் செல்ல வேண்டும்.


இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக தீர்வு காணமுடியாது. மனித உயிர்கள் பலியாவதைத் தடுக்க விரைவில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். வன்முறைகள் கைவிடப்பட வேண்டும்.

அனைத்து வகையான வன்முறைகளையும் கனடா கண்டனம் செய்கிறது. ஜூன் 15 இல் பேசாலை தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலையும், பஸ் குண்டு வெடிப்பையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஆத்திரமூட்டல்களும், வன்முறையும் இருந்தபோதும் கூட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைதி முயற்சிகளில் ஈடுபட்டுடன் உள்ளார்.

அனைத்து மக்களது உரிமைகளும், பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அனைத்து இன மக்களது நியாயபூர்வமான உரிமைகள் அளிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# பங்களாதேஷ் பயணம்; ஒத்திவைத்தார் மகிந்த!



கொழும்பு —

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்களாதேஷுக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 9ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ பங்களாதேஷுக்கு விஜயம் செய்யவிருந்தார்.

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் மற்றும் பாதுகாப்பு சூழ்நிலைக்கமைய தற்போது பயணத்தை மேற்கொள்ள முடியாதென்ற ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய வெளிவிவகார அமைச்சு பங்களாதேஷ் அரசுக்கு தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவித்தன. (தே)

# மின்சார கட்டண அதிகரிப்பு 90 அலகுகளுக்குள் இல்லை!

கொழும்பு —

மாதாந்தம் 90அலகுகளுக்குள் மின்சாரத்தைப் பயன்படுத்துவதுவோருக்கு - மின் கட்டண உயர்விலிருந்து விலக்களிக்க அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே 30அலகுகள் வரைக்கும் மின்சாரக் கட்டணம் அதிகரிப்பதில்லை என்றும் 31அலகுகளுக்குள் இருந்து 90வரை ஒரு ரூபாவாலும் அலகு 91க்கு மேல் ஒரு ரூபா 50 சதத்தாலும் அதிகரிக்கவுள்ளதாக மின்சார சபை அறிவித்திருக்கிறது.

90அலகுகளுக்குள் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதால் ஏழை மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குவார்கள் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்ததையடுத்தே இந்த சலுகை வழங்கப்பட்டவுள்ளது.

அடுத்த வாரம் இடம்பெறும் அமைச்சரவை கூட்டத்தில் அலகு 90க்கான சலுகை அடங்கிய புதிய விபரம் அறிவிக்கப்பட்டு அனுமதி பெறப்படும் என்று கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை, 90அலகுகளுக்குள் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தும் பாவனையாளர்களை ஊக்விக்கும் திட்டம் ஒன்றையும் மின்சார சபை நடைமுறைப்படுத்தவிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதன்படி 90 அலகுகளுக்குள் மின்சாரத்தை பயன்படுத்தும் பாவனையாளர்களுக்கு சிக்கன மின்குமிழ்கள் இலவசமாக வழங்கப்போவதாகவும் கூறப்படுகிறது.

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 20 பலவீனமான தொகுதிகளின் அமைப்பாளர்கள் நீக்கப்படுவர்!



கொழும்பு —

சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்கும் நடவடிக்கையின் கீழ் 20 பலவீனமான தொகுதிகளின் அமைப்பாளர்களை நீக்கிவிட்டு புதிதாக அமைப்பாளர்கள் நியமிக்கப்படக்கூடும் என்று கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

சுதந்திரக் கட்சியின் பலவீனமான தொகுதி அமைப்பாளர்கள் தொடர்பாக தொகுதிகள் அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கட்சியின் தலைமைப்பதவியை ஏற்றிருக்கும் ஜனாதிபதி மகிந்தவின் ஆலோசனையின் பேரில் கட்சி முழு மறுசீரமைப்புக்கு உள்ளாக்கப்படவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் கட்சியின் மாவட்ட ஏற்பாடுகளை மறுசீரமைக்குமாறு மாவட்டத் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 23 ஆம் திகதி தொடக்கம் ஒருவார காலம் கட்சியின் மறுசீரமைப்பு வாரம் என பெயரிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கட்சி மறுசீரமைப்பு வாரத்தில் தொகுதிகள் அளவில் சிறப்பு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படவுள்ளன. அப்போது புதிய உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 55 ஆம் ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

அதற்கு முன்னதாக இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளை நிறைவு செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இடம்பெயர்ந்தோர் உரிமைகளை பாதுகாப்பதற்கு விசேட சட்டமூலம்

கொழும்பு —

இடம்பெயர்ந்தவர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்கு விசேட சட்டமூலம் ஒன்றைநிறைவேற்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு திட்டமிட்டிருப்பதாக ஆணைக்குழுவின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் தேனக்க திஸநாயக்க தெரிவித்தார்.

சட்டமூலம் கொண்டுவருவதால் இடம்பெயர்ந்த அனைவருக்கும் ஒரே விதமான உதவிகளை வழங்கமுடியும்.

யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தம் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து இருக்கின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தவறியிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இத்தாலிக்குச் செல்லவிருந்த 39 தமிழ் இளைஞர்கள் கைது!

கொழும்பு —

சட்டவிரோதமாக மீன்பிடிப்படகு மூலம் இத்தாலிக்குச் செல்வதற்காக விடுதி ஒன்றில் தங்கவைக்கப்பட்டிருந்த 39 தமிழ் இளைஞர்கள் மாத்தறையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை அக்குரஸ்ஸ பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 33 பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், எஞ்சியோர் புத்தளம், சிலாபம், கற்பிட்டி, நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தெவுந்தரவில் இருந்து மீன்பிடிட்றோலர் மூலமாக இவர்கள் இத்தாலிக்கு செல்லவிருந்தனர். இரு தமிழர்கள் இவர்களிடம் சுமார் 2-3 லட்சம் ரூபாயை பெற்றுக் கொண்டு பஸ் ஒன்றில் ஏற்றி வந்து அக்குரஸ்ஸவில் தங்கவைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் அதிகாலை இவர்கள் றோலர் மூலம் இத்தாலிக்கு புறப்படத் தயாராக இருந்தனர். இவர்களை ஏற்றிச் செல்ல தயாராக இருந்த ட்றோலர் படகைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

# மூதூரில் ஷெல் தாக்குதல்


திருகோணமலை —

திருகோணமலை - மூதூர் புளியடிச் சந்தியில் வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்று முன்தினம் முற்பகல் 9 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன்பின்னர் இரண்டு தரப்பினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றன.

படைத்தரப்பினர் புலிகளின் நிலைகள் மீது ஷெல் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து புலிகளும் பதில் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு தேசியத்தலைவர் நிதி உதவி!



கிளிநொச்சி—

கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் 1 லட்சம் ரூபா நிதியைக் கையளித்துள்ளார்.

கிளிநொச்சி பொது வைத்திய சாலை மேம்பாட்டுக்கான - கொடி வாரத்துக்கான தொடக்க நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவ அதிகாரி சதானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் - பொதுச் சுடரை வணிகர் ஒன்றியத்தலைவர் வெற்றியரசன் ஏற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார்.

வெற்றியரசன், தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், கரைச்சிப் பிரதேச சிறப்பு ஆணையாளர் நித்தியானந்தன், தமிழ்தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் போதே தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் வழங்கப்பட்ட 1 லட்சம் ரூபா நிதியை மாவட்ட மருத்துவ அதிகாரி சதானந்தனிடம் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் கையளித்தார்.





வட்டக்கச்சி ஆறுமுகம்வீதி கலைவாணி விளையாட்டு மைதானத்தில் மாயவனூர் மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதைப் படங்களில் காணலாம்.

படம் - வே.சீலன்

# கப்டன் யோகன் பயிற்சிப் பாசறையில் 4ஆவது அணிக்கான பயிற்சி நிறைவு

கிளிநொச்சி—

கப்டன் யோகன் பயிற்சிப் பாசறையில் பயிற்சியை நிறைவுசெய்த 275 இற்கும் மேற்பட்ட வீரர்களைக் கொண்ட நான்காவது உள்ளக பாதுகாப்புப் படையணி நேற்றுமுன்தினம் வெளியேறியது.

இந்த நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் காலை முதல் மாலைவரை யோகன் பயிற்சிப் பாசறையில் நடைபெற்றது. காலை நிகழ்வுகளாக உள்ளக பாதுகாப்பு வீரர்களுக்கிடையில் பல்வேறுபட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது.

தொடர்ந்து மாலை நிகழ்வுகள் பிற்பகல் 2.30 மணிக்கு பாசறைப் பொறுப்பாளர் நிரூபன் தலைமையில் ஆரம்பமாகின. இதில் பொதுச்சுடரை வன்னிவிளான்குள மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் சைமன் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதில் கப்டன் யோகனின் படத்துக்கான ஈகச்சுடரை மக்கள் கட்டுமானப் படை நிர்வாகப் பொறுப்பாளர் சுந்தர் ஐயா ஏற்றி வைத்தார்.

படத்துக்கான மலர்மாலையை போராளி ஜெறோம், பயிற்சி ஆசிரியர் யாழ்நம்பி ஆகியோர் அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து மல்லாவி துணுக்காய் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் சிறப்புரையாற்றினார். வீரர்களுக்கான அடையாள அட்டைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துறைப்பொறுப்பாளர் சின்னண்ணா வழங்கினார்.

தொடர்ந்து போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. பரிசில்களை சின்னண்ணா, அருந்தவம், முல்லைவீரன் ஆகியோர் வழங்கிக் கௌவித்தனர்.

இதில் பெருமளவான போராளிகளும், பொறுப்பாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# மன்னாரில் இளைஞர் கைது!

மன்னார்—

தலைமன்னார் கடற்கரைப்பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.

இந்தியா செல்லும் நோக்கில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய அளவக்கையை சேர்ந்த பிலிப்பு நேரிஸ்றோய் (வயது 30) என்பவரே நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் கைது செய்யப்பட்டவராவார்.

நேற்றுக் காலை இவரை மன்னார் மாவட்ட மேலதிக நீதிவான் முன் தலை மன்னார் பொலிஸார் ஆஜர்படுத்திய போது குறித்த நபரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட மேலதிக நீதிவான் ரி.ஜே.பிரபாகரன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை கைது செய்யப்பட்ட நபர் தன்னை உறுதிப்படுத்திக்கொள்ளும் அடையாள அட்டையோ வேறு ஆவணமோ வைத்திருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (மோ)

# மருத்துவமனையைப் பேணிக்காக்க கொடிவாரத்தில் நிதியை வழங்குங்கள்

## நிதித்துறை வணிக நிறுவனங்கள் கோரிக்கை

கிளிநொச்சி—

கிளிநொச்சி மருத்துவமனையைப் பேணுவதற்கு அனைவரும் இயன்றளவு தமது நிதிப்பங்களிப்பை - தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கொடிவாரத்தில் வாரி வழங்கவேண்டுமென நிதித்துறை வணிக நிறுவனங்கள் வெளியிட்டிருக்கும் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையைப் பேணிக்காப்போமென வெளியிடப்பட்டிருக்கும் அந்தப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மனிதவளம் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது. மக்கள் அனைவரும் உடல் நலமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை நாம் கொண்டிருக்க வேண்டும். அந்த வகையில் மனிதன் உடல் நலமுள்ளவனாக வாழ்வதற்கு மனிதனின் இன்றியமையா தேவைகளில் மருத்துவமனை முக்கிய இடத்தைப் பெறுகிறது.

எனவே, மருத்துவமனையையும், அதன் சூழலையும் தூய்மையாகப் பேணவேண்டியது ஒவ்வொருவரினதும் முக்கிய கடமையாகும்.

எமது தேசத்து மக்கள் போரால் ஊரற்று, தமது இருப்பிடங்களை இழந்து, இடம்பெயர்ந்து, நாடு விட்டு நாடு சென்று இடர்பல பட்டுத் தற்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், மருத்துவமனையின் தேவை மக்களுக்கு மிகவும் அவசியமானதாகும்.

சூழல் மாசுறுதல் இன்று உலகில் ஒரு பெரிய சிக்கலாக உருவெடுத்துள்ளது. சூழல் மாசுறுதல் பல்வேறு காரணங்களால் ஏற்பட்டாலும், பெரும்பாலும் சமுதாயத்தாலேயே ஏற்படுகிறது. இதற்கு மருத்துவமனையும், அதன் சுற்றாடலும் விதிவிலக்கல்ல.

மனிதன் தனது தன்னல எண்ணத்தால் மருத்துவமனைச் சுற்றாடலைத் தரக்குறைவான நிலைக்கு உள்ளாக்கி வருகிறான். மருத்துவமனைகளும், அவற்றின் சுற்றாடல்களும் அழுக்குறும் நிலை தொடர்ந்தால் மக்களின் வாழ்வும் ஊறுறும் நிலையே தொடரும்.

மருத்துவமனை மக்களது உடைமையே! எனவே, மக்கள் அனைவரும் மருத்துவமனையின் மேம்பாட்டுக்கு உதவுவதோடு, மருத்துவமனையின் சுற்றாடல் பாதுகாப்புப் பற்றியும் சிந்தித்து, சுற்றாடல் பாதுகாப்புக்கான அத்துமீறல்களையும் நீக்கி ஒவ்வொரு மருத்துவமனையையும் பேணிக்காக்க வேண்டும்.

நாம் ஒரு வளமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்றால் - "எமது மருத்துவமனை" என்ற எண்ணக்கருவை மக்கள் தமது அடிமனதில் ஆழமாகப் பதித்திருக்க வேண்டியது அவசியமாகும். அத்துடன், மருத்துவமனையின் திட்டமிடலுக்கு அமைவாகவும் ஒவ்வொரு வேலைத் திட்டங்களுக்கான இட அமைவுகளுக்கேற்பவும் சூழலை நாம் பேணுவதோடு மருத்துவமனையின் மேம்பாட்டுக்குப் பங்களிப்பையும் வழங்க வேண்டும்.

மருத்துவமனை ஆளுகையின் திட்டமிடல் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்போம்.

மருத்துவமனையின் வளங்களைப் பேணிக்காத்து மருத்துவமனையின் மேம்பாட்டுக்குப் பங்களிப்போம்.

மருத்துவமனையின் உட்கட்டுமான அமைப்புகளான வடிவமைப்பு, கழிப்பறையமைப்பு, குடிநீர் அமைப்பு என்பவற்றை உரிய முறையில் பேணிப் பயன்படுத்துவோம்.

மருத்துவமனையில் மனிதனின் அடிப்படைத் தேவையான நீர்வளத்தைப் பாதுகாத்து, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவோம்.

மருத்துவமனைக் கழிவுகளை உரிய இடத்திலிட்டு, உரியமுறையில் அகற்றுவதற்கு உதவுவோம்.

எமது எதிர்காலத் தலைமுறையின் நலன் கருதி, புரிந்துணர்வுடன் மருத்துவமனையின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து, தூய்மையான நீரையும், வளியையும் பெற்று நலமே வாழ்வோம்.

எனவே, இந்த செயற்திட்டங்களுக்கு அனைவரும் இயன்றளவு நிதிப் பங்களிப்பைக் கொடிவாரத்தில் வாரி வழங்குவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயிற்சி நிறைவு!

கிளிநெர்ச்சி—

கிளிநொச்சி - விசுவமடு, பாரதிபுரம் "வேதா" பயிற்சிப் பாசறை முதலாம் கட்ட மக்களுக்கான கட்டுமானப் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை மாவீரர் ஆறுமுகத்தின் துணைவியார் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியை பாரதிபுரம் வேலைத்திட்டப் பொறுப்பாளர் மயூரன் ஏற்றினார்.

நிகழ்வில் - கருத்துரைகளை செல்வரட்ணம், மயூரன் ஆகியோர் நிகழ்த்தினர். பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்களை கிராம சேவையாளர் செல்வரட்ணம், பயிற்சி ஆசிரியுர்கள் குமாரி, கந்தசாமி ஆகியோர் வழங்கினர். (கு)

# லொறிகளில் உணவு, மருந்துகள் கொண்டு செல்லும் நடைமுறைகள்!

## தமிழீழ சுகாதார சேவையினரால் அறிவிப்பு

கிளிநொச்சி—

லொறிகளில் உணவு, மருந்துப் பொருட்களை எடுத்துச் செல்வோருக்கான அறிவுறுத்தலை தமிழீழ சுகாதார சேவைகளின் விசேட நடவடிக்கைப் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டப்பட்டிருக்கும் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

லொறிகளில் கொண்டு செல்லப்படும், உணவு மற்றும் மருந்துப் பொருட்களுக்கு தமிழீழ சுகாதார சேவைகளின் வாகன உணவு மருந்து ஏற்றுமதி உரிமம் பெறப்படல் வேண்டும்.

உணவு, மருந்துப் பொருட்களை இரசாயனங்கள் மற்றும் ஏனைய பொருட்களுடன் இணைத்து ஏற்றிச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

பழுதடைந்த, காலாவதியான, பதனிழந்த, கலப்படமான பொருட்களை எடுத்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

தடை செய்யப்பட்ட போதைத் தன்மையை ஏற்படுத்தும் பொருட்களை எடுத்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

பதனிடப்பட்டு, லொறிகளில் ஏற்றிச் செல்லப்படும் மீன்வகை, குளிரூட்டப்பட்ட வாகனங்களில் மட்டுமே ஏற்றிச் செல்லப்பட வேண்டும்.

உணவு, மருந்துகள், தொற்று மாசு ஏற்படக்கூடிய வகையில் எடுத்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டுமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துப்பாக்கி வேட்டுகளால் நெல்லியடியில் பதற்றம்

நெல்லியடி—

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், சுற்றிவளைப்புத் தேடுதல்களால் நேற்று நெல்லியடி நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பதற்றம் நிலவியது.

நேற்று காலை 11.00 மணியவில் நெல்லியடி - கொடிகாமம் வீதியில் இனந்தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாகவும், இதையடுத்து இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டவரை கொடிகாமம் வீதியால் துரத்தி சென்றதாகவும், இதன்போது இராணுவத்தினர் மேற்கொண்ட சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தால் நகரில் பதற்றம் நிலவியதாகக் கூறப்படுகிறது.

துப்பாக்கி வேட்டுச் சத்தங்களால் அங்கு நின்றோரும், நகருக்குப் பொருட்கள் வாங்க வந்தோர்களும் சிதறியோட தொடங்கியதாகவும், கடைகள் சில மூடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் நகரப் பகுதியில் மக்களின் அடையாள அட்டைகளைப் படையினர் பார்வையிட்டதாகவும், அடையாள அட்டைகள் இல்லாதோர் வீதிகளில் அமர்த்தப்பட்டு நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை நேற்று அதிகாலை 5.00 மணியளவில் நெல்லியடி சந்தியிலிருந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதி வழியாக வதிரி சந்தி வரையான பகுதிகளில் படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர். இதேபோன்று மூத்த விநாயகர் கோவிலடி, நாவலர் மடம் ஆகிய பகுதிகளிலும் இராணு வத்தினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுற்றிவளைப்புத் தேடுதலின் போது அடையாள அட்டைகளை படையினர் வாங்கிச் சென்றதாகவும், அடையாள அட்டைகளை காவலரணில் வந்து வாங்கிச் செல்லுமாறு இராணுவத்தினர் கூறிவிட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (12)



அண்மையில் இடம்பெற்ற தெல்லிப்பளை மத்தியஸ்தர் சபை அங்குரார்ப்பண நிகழ்வில் தவிசாளர் கு.சிவலிங்கம் உரையாற்றுவதையும், அருட்திரு யோ.பிரான்சிஸ் அடிகளார் மகாராஜ ஸ்ரீ சு.து.சண்முகலிங்கநாத குருக்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# முஸ்லிம்களின் அபிவிருத்தி நிறுவனம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்களுக்கான அபிவிருத்தி நிறுவன அங்குரார்ப்பண கூட்டம் கடந்த 27 ஆம் திகதி பளை பிரதேச செயலக மண்டபத்தில் மௌலவி எஸ்.எம்.ஸஹீல் தலைமையில் இடம்பெற்றது.

அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவராக எம்.யு.எம்.தாஹீர், செயலாளராக மௌலவி எஸ்.எம்.ஸகீல், உபசெயலாளராக மௌலவி எம்.பாகீர், பொருளாளராக மௌலவி எம்.ஜீ.எம் இர்பான், திட்டமிடல் பணிப்பாளராக எஸ்.எம்.ஸகீல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபை உறுப்பினர்களாக - எஸ்.கே.அஸ்ம், எம். அஸ்வாத், எஸ்.எம்.சுலைமான், எ.சி. மாகீர், எ.நவாஸ், வி.சி எஸ். றவுஸ் சுனாம், எ.ஸாசீக், எஸ்.அஸன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அங்குரார்ப்பண கூட்டத்துக்கு உலமாக்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகசபை உறுப்பினர்கள், மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இரண்டாம் காலாண்டுக்கான மருந்து வகை விநியோகம்

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கான இந்த வருடத்துக்கான இரண்டாம் காலாண்டுக்கான மருந்து வகைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினர் அரசினர் வைத்தியசாலைகள் மற்றும் மத்திய மருந்தகங்களுக்கான மருந்து வகைகளை விநியோகித்து வருகின்றனர்.

இதன்படி சங்கானை அரசினர் வைத்தியசாலை, மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றுக்கான மருந்து வகைகள் கடந்த செவ்வாய்க்கிழமை சுகாதார திணைக்களத்தின் லொறிகள் மூலம் வழங்கப்பட்டன.

மறுநாள் புதன்கிழமை வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகம், தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகம், இளவாலை அரசினர் மத்திய மருந்தகம், பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை ஆகியவற்றுக்கான மருந்து வகைகள் வழங்கப்பட்டன.

இரண்டாம் காலாண்டுக்கான மருந்து வகைகள் விநியோகிக்கப்பட்டு வருவதனால், நோயாளர்கள் மருந்துகளைத் தட்டுப்பாடின்றி பெற்றுக் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# புங்குடுதீவுப் பாலம் விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம்—

புங்குடுதீவு - குறிகாட்டுவான் இறங்குதுறைப் பாலம் விரைவில் புனரமைக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தகவல்கள் தெரிவித்தன.

தற்போது 30 அடியாகவுள்ள இறங்குதுறைப் பாலத்தில் படகுகள் நிறுத்தப்படும் பகுதியில் வடக்குப் பக்கம் மேலும் 60 அடிகள் வரை விஸ்தரிக்கப்படவுள்ளது.

இந்தப் புனரமைப்புக்கென 45 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆசிரியர் நியமனத்துக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்—

கற்பித்தல் தொடர்பான தேசிய பயிலுநர் டிப்ளோமாவின் கீழ் ஆசிரியர் நியமனம் பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக அவர்களின் தகைமைகளைப் பரிசீலித்து பார்ப்பதற்காக நேர்முகப் பரீட்சை ஒன்று எதிர்வரும் 04 ஆம் திகதி காலை 11 மணிக்கு வின்சன் டயஸ் விளையாட்டரங்கிற்கு அருகிலுள்ள ஊவா மாகாண மத்திய நூலக சேவை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முக அட்டை கிடைக்கப் பெற்றோர், பிறப்புச் சான்றிதழ், கல்வி பொதுத் தராதரப் பரீட்சை சான்றிதழ், க.பொ.த உயர்தரப் பரீட்சைச் சான்றிதழ், உயர்தரப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் மூலப் பிரதி, உறுதி செய்யப்பட்ட நகல் பிரதிகளையும் எடுத்துவருமாறு ஊவா மாகாண சபையின் கல்வி அபிவிருத்தி உதவிச் செயலாளர் நிமால் வீரசிங்க தெரிவித்துள்ளார். (12)

# இரத்த வங்கி, பற்சிகிச்சை நிலையம் திறந்து வைப்பு

மந்திகை—

மந்திகை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் பற்சிகிச்சை நிலையம் மற்றும் இரத்த வங்கி என்பன மாகாண சுகாதார சேவைப் பிரிவுப் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது.

இதன் செயற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை தெரிவித்தார். (12)

# தொழிற் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்—

உயர் தரப் பரீட்சைக்கு தோற்றிய வேலை வாய்ப்புக்களை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு விசேட தொழிற்பயிற்சி திட்டத்தை ஆரம்பித்திருப்பதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் தொலைக்கல்வி பயிற்சியின் ஓர் அங்கமாகவே இந்த தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் அரச மற்றும் தனியார் துறைகளில் பயிற்சிக்காக அமர்த்தப்படுவர். பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு மாதாந்தம் கொடுப்பனவுகள் வழங்கப்படும். 3 முதல் 9 மாதங்கள் கொண்டதாகப் இந்தப் பயிற்சிக் காலம் அமையும்.

2004 ஆம்ஆண்டு அல்லது 2005 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 22 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகள் பயிற்சிக்காக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகளின் மாதாந்த குடும்ப வருமானம் 10 ஆயிரம் ரூபாவுக்கு குறைந்ததாக இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கொழும்பு - 05, நாவலர் வீதியில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் திட்ட அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

# மிதிவெடி அகற்றும் பணிக்கு இடையூறு

மாதகல்—

மாதகல் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தின் பணிகளுக்கு விஷமிகள் சிலரால் இடையூறு விளைவிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியை அண்மையில் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனம் ஆரம்பித்து மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

இந்த மிதிவெடி அகற்றும் பணிக்கென நிறுவனத்தால் நடப்பட்ட கம்பங்கள் பிடுங்கிச் செல்லப்படுவதாகவும், சேதமாக்கப்படுவதால் தமது பணிகள் தடைப்படுவதாகவும் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக இந்த நிறுவனத்தால் வலி.தென்மேற்கு பிரதேச செயலரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# உதவிக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்—

வலிகாமம் கல்வி வலயத்தில் முறைசாரா கல்வி, உடற்கல்வி, முன்பள்ளி ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த பாடத்துறையில் அல்லது அதற்கு சமனான ஏதாவது ஒரு பாடத்தில் பட்டம் பெற்றவர்களும், குறித்த பாடத்துறையில் பயிற்சி பெற்ற ஆசிரியராக 10 வருடங்கள் கடமையாற்றிய இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு 1, வகுப்பு 2.1 ஆசிரியர்கள் ஆகியோர் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னதாக வலிகாமம் கல்வி வலயத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும் எனவும் ஏனைய வலயங்களை சேர்ந்தவர்கள் தத்தமது வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும் பணிப்பாளர் கேட்டுள்ளார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை பத்து



பெயர் : ப.தாரகா
முகவரி : அல்வாய்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பக்கும்
புகைப்படமும் இத்துடன்
இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# சிற்றூழியர் பற்றாக்குறை இந்த வருடத்துடன் நீங்கும்

## சுகாதார பிரதிப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டு வைத்தியசாலைகளில் பற்றாக்குறையாகவுள்ள சிற்றூழியர்களுக்கான பிரச்சினை இந்த வருடத்துடன் நீங்கி விடுமென யாழ். சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

தற்போது 200 சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 137 பேர் பரிசோதகர்களாகவும், 108 பேர் மருத்துவ மாதுக்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 65 சுகாதார தொழிலாளர்களை பரிசோதகராக தரமுயர்த்துவதற்கான வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. எனவே இந்த வருட இறுதிக்குள் சிற்றூழியர்களுக்கான பற்றாக்குறை நீங்கிவிடும்.

எனினும் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை தொடர்ந்து இருக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாத்திரிகர் விடுதி திறப்பு

நயினாதீவு—

நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையினரால் புதிதாக அமைக்கப்பட்ட யாத்திரிகர்கள் விடுதி, நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் 10 ஆம் நாள் உற்சவ தினமான எதிர்வரும் புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

நயினாதீவுக்கு வரும், பொதுமக்கள் மற்றும் நயினை நாகபூசணி அம்மனின் உற்சவ காலங்களில் வரும் பக்தர்கள் தங்கி நிற்கக் கூடிய சகல வசதிகளுடனும் 36 அறைகளுடன் கூடியதாக இந்த விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விடுதியில் தங்கி நிற்பவர்களுக்கு மிகவும் குறைந்த கட்டணமே அறவிடப்படுமென அமுதசுரபி அன்னதான சபையினர் தெரிவித்தனர்.

# கால்நடைகள் வழங்கல்!

யாழ்ப்பாணம்—

புத்தூர் பகுதியில் கால்நடை வளர்ப்போரில் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு நிகொட் நிறுவனத்தின் உதவியுடன் பசுமாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கப்பட்டன.

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களில் ஆடு வளர்ப்போருக்கு ஒவ்வொரு ஆடும், மாடு வளர்ப்போருக்கு ஒவ்வொரு பசுமாடும் வழங்கப்பட்டன.

கோப்பாய் கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சிபாரிசின் பேரில் தெரிவு செய்யப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கே இந்த ஆடு மற்றும் பசுமாடுகள் வழங்கப்பட்டன.

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ஹெரோயின் பறிமுதல்

தூத்துக்குடி —

தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 40 லட்சம் ரூபா மதிப்புள்ள ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அதை கடத்த முயன்ற நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

தூத்துக்குடி மாவட்ட கடற்கரையோரங்களிலிருந்து இலங்கைக்கு ஹெரோயின் கடத்தப்படுவதாக போதைப் பொருள் தடுப்பு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

தூத்துக்குடி பொலிஸ் இன்ஸ்பெக்டர் காந்தி தலைமையில் பொலிஸார் தருவைக்குளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது கையில் பொட்டலத்துடன் நின்ற தூத்துக்குடி - ரங்கநாதபுரத்தைச் சேர்ந்த ஈஸ்வரமூர்த்தியிடம் விசாரணை நடத்தினர்.

அவரிடமிருந்து 400 கிராம் நிறை கொண்ட ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டது. அதன் மதிப்பு 40 லட்சம் ரூபா , ஈஸ்வரமூர்த்தி கர்நாடகாவில் ஹெரோயினை வாங்கிவந்ததும், அதை இலங்கைக்கு கடத்தவிருந்ததும் தெரியவந்ததை அடுத்து அவரை பொலிஸார் கைது செய்தனர்.

### பரமி குலதுங்க மீதான தற்கொலைத் தாக்குதல்:

# பனாகொடையில் தங்கியிருந்த சந்தேகநபர் குறித்து விசாரணை

கொழும்பு —

கடந்த திங்கள் காலை கொழும்பின் புறநகர்ப் பகுதியான பன்னிப்பிட்டியவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தின் மூன்றாம் நிலைத் தளபதி லெப். ஜெனரல் பரமி குலதுங்க கொலை குறித்து - சந்தேகத்தின்பேரில் பனாகொடவில் தங்கியிருந்த நபர் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பனாகொடை இராணுவமுகாமருகே உள்ள கட்டடத் தொகுதி ஒன்றில் - ஒரு அறையில் வாடகைக்குத் தங்கியிருந்த இந்தச் சந்தேகநபர் - லெப். ஜெனரல் பரமி குலதுங்க மீதான தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்ட நாள் முதல் காணாமற்போயுள்ளார்.

இதுகுறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கட்டடத் தொகுதியின் உரிமையாளர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த விசாரணையின்போது - இந்தச் சந்தேகநபர் அடிக்கடி வவுனியா சென்று வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

உடல்நலக் குறைவாகவுள்ள தனது தாயாரைப் பார்த்து வரவே தான் வவுனியா சென்றுவருவதாக அவர் காரணம் கூறியுள்ளார்.

லெப்.ஜெனரல் பரமி குலதுங்க மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற அன்று - காலை 7 மணி முதல் 7.30 மணிவரை, தான் தங்கியிருந்த கட்டடத் தொகுதியைச் சுற்றி சந்தேக நபர் நடமாடியதாக அங்கு பணி புரியும் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். அந்த நேரத்தில்தான் பரமி குலதுங்க தனது வீட்டிலிருந்து புறப்பட்டுச் செல்வது வழக்கமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்தேகநபரைச் சந்திக்க இளைஞர்கள் வந்து சென்றதாகவும் இது குறித்து தான் அவரிடம் கேட்ட போது அவர்கள் தனது உறவினர்கள் என தனக்கு பதிலளிக்கப்பட்டதாகவும் விடுதி உரிமையாளர் கூறியுள்ளார்.

லெப். ஜெனரல் பரமி குலதுங்க மீதான தற்கொலைத் தாக்குதல் நடைபெறுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னரும் ஒரு இளைஞர் அடிக்கடி வந்து போனதாகவும் அந்த நபர் பொலிஸாரால் தேடப்பட்டுவருபவராக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பரமி குலதுங்க கொல்லப்படுவதற்கு முதல்நாள் இரவு, தனது அறையிலேயே சந்தேகநபர் தங்கியிருந்தார் எனவும், அவரைச் சந்திக்க வந்த இரு நபர்கள் இரவில் காணாமற்போயிருந்தனர் எனவும், அவர்கள் வந்த கறுப்பு நிற மோட்டார் சைக்கிளும் தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் ஒரே மாதிரியாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழக முகாம்களிலுள்ள ஈழத் தமிழ் அகதிகளுக்கான

# மாதாந்த பணக்கொடை அதிகரிப்பு; இலவச மின்சாரத்துக்கு கட்டுப்பாடு!

பழனி —

தமிழக முகாம்களில் தங்கியுள்ள ஈழ அகதிகளுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்படும் பணத்தை மாதம் ஒருமுறை வழங்கவும், இலவச மின்சாரத்துக்கு கட்டுப்பாடு விதித்தும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து அகதிகளாகச் சென்ற ஈழத் தமிழர்கள் - தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்கு நபர் ஒருவருக்கு மாதாந்தம் எட்டு கிலோ வீதம் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

அவற்றுடன் பாய், போர்வை, துணிகள், சமையல் பாத்திரங்கள், அடுப்பு ஆகியனவும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

முகாமில் உள்ள அகதிகளுக்கு 15 நாட்களுக்கு ஒருமுறை பணமும் வழங்கப்பட்டது. தற்போது அதை மாதத்துக்கு ஒரு முறை மட்டுமே வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி குடும்பத் தலைவருக்கு 15 நாட்களுக்கு ஒருமுறை வழங்கப்பட்ட 100 ரூபாவை 200 ரூபாவாகவும் - 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட 72 ரூபாவை 144 ரூபாவாகவும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதல் குழந்தைக்கு வழங்கப்பட்ட 45 ரூபாவை 90 ரூபாவாகவும், 2 ஆவது குழந்தைக்கு வழங்கப்பட்ட 22 ரூபா 50 சதத்தை - 45 ரூபா ஆகவும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் தங்கியுள்ள வீட்டில் ஒரு விளக்கு மட்டுமே எரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குளிர்சாதனப்பெட்டி, வானொலி, தொலைக்காட்சி, மின்அழுத்தி, மின் அடுப்பு போன்றவற்றை பலர் பயன்படுத்துகின்றனர். இதனால் அதிகளவு மின்கட்டணம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் தற்போது மின்சாரத்துக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு வீட்டுக்கு நாளொன்றுக்கு ஒரு அலகு மின்சாரம் மட்டுமே பயன்படுத்த வேண்டும். இதன்படி இரண்டு மாதத்துக்கு 60 அலகுகள் பயன்படுத்தலாம். மீதியுள்ள அலகுகளுக்கு அகதிகள் தான் பணம் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு வருவாய் ஆய்வாளர்கள் மூலம் அகதிகளுக்கு விளக்கப்பட்டுள்ளது.

# முக்கிய இரு கூட்டங்களை ஐ.தே.க.நாளை கூட்டுகிறது

கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டமும், செயற்குழுக் கூட்டமும் நாளை நடைபெறவுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையில் - எதிர்க்கட்சி என்ற வகையில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இந்தக் கூட்டங்களில் ஆராயப்படவுள்ளது.

ஜேர்மனிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கூட்டங்களைக் கூட்டுமாறு அங்கிருந்து ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தான் நாளை அதிகாலை நாடு திரும்பவுள்ளதால் - அன்று மாலையே இந்தக் கூட்டங்களை கட்சித் தலைமையகத்தில் கூட்டுமாறு ரணில் அறிவுறுத்தியுள்ளார்.

சமாதான நடவடிக்கைகள் தடைப்பட்டு, நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடியான நிலையில் - பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் தனது கட்சி எடுக்கவேண்டிய நடவடிக்கைகள், மகிந்தவின் அரசாங்கத்தை ஆதரிப்பதா, இல்லையா என்பன குறித்து இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்படும் என ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

# 18 ஆவது திருத்தத்துக்கு ஐ.தே.க - அரசு உடன்பாடு

கொழும்பு —

அரசியல் யாப்பில் 18 ஆவது திருத்தம் மேற்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசாங்கம் உடன்பாடு செய்துள்ளது.

ஒன்பது மாகாணங்களில் ஐந்து மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்க இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான சட்ட முன்வரைவு எதிர் வரும் வியாழக்கிழமை நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொறடா ஜோசப் மைக்கேல் பெரேரா இது குறித்துக் கூறுகையில்-

அரசாங்கத்தின் இந்தத் திருத்தத்தை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கும் என்றார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற கிளைகள் அமைக்கப்படும் நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையும் 11 இலிருந்து 21 ஆக உயர்த்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### வேட்புமனு நிராகரிப்பு விவகாரம்

# பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு ஐ.தே.க. செயற்குழுவுக்கு அதிகாரம்

கொழும்பு —

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகரசபைக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான அதிகாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவுக்கு வழங்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒழுக்காற்றுக் குழு கடந்த வாரம் கூடிய போது இந்த முடிவு எடுக்கப்பட்டது. கொழும்பு மாநகரசரபை வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக ஆராய்வதற்காக் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கடந்த வாரம் நடைபெற்ற ஐ.தே.கட்சியின் ஒழுக்காற்றுக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மொஹமட் மஹரூப் மற்றும் மிலிந்த மொறகொட ஆகியோர் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஐ.தே.க.வட்டாரங்கள் தகவல்கள் வெளியிட்டன.

# மின்சாரசபை மறுசீரமைப்புக்கு ஐ.தே.கட்சியின் ஆதரவு கோரல்

கொழும்பு —

மின்சார சபை மறுசீரமைப்பு சட்ட முன்வரைவுக்கு ஐ. தே.கட்சியின் ஆதரவை அரசாங்கம் கோரியுள்ளது. மின்சார சபை சீரமைப்பு சட்ட முன் வரைவை ஜே.வி.பி. கடுமையாக எதிர்த்துவரும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவை நாடவுள்ளதாக மின் சக்தி அமைச்சர் ஜோன் செனிவிரத்ன தெரிவித்தார்.

இந்த சட்ட முன்வரைவு தொடர்பாக ஆலோசனைகளை அளிக்குமாறு ஜே.வி.பி.யிடம் கோரியுள்ளதாகவும் - ஆனால், ஜே.வி.பி யோசனைகள் எதையும் முன்வைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் மின்சார சபை மறுசீரமைப்பு சட்டத்துக்கு ஆதரவளிப்பது தொடர்பாக தமது கட்சி முடிவெடுக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

# கருணா குழுவின் கடத்தல் குறித்து ஜனாதிபதி மகிந்தவிடம் முறைப்பாடு

கொழும்பு —

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுவான கருணா குழுவினர் வர்த்தகர்களைக் கடத்திப் பணம் பறிக்கும் சம்பவம் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்தவுக்கு நெருக்கமான மூத்த அரசியல் தலைவர் இது தொடர்பாக மகிந்தவை நேரில் சந்தித்து முறைப்பாடு செய்துள்ளார்.

தங்கம் மற்றும் நவரத்தினங்கள் விற்பனை செய்யும் வர்த்தகர்கள் இருவரிடமிருந்து பல மாதங்களாக கருணா குழுவினர் பணம் அறவிட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

செட்டித்தெரு மற்றும் புறக்கோட்டை ஆகிய பகுதிகளில் வர்த்தகம் நடத்தி வரும் அந்த இரு வர்த்தகர்களின் பெயர்களும் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிடப்படவில்லை.

வெள்ளவத்தையைச் சேர்ந்த மற்றொரு தங்கநகை வர்த்தகரையும் கருணா குழு கடத்திச் சென்று 20 மில்லியன் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரே சில நாட்களுக்கு முன்னர் விடுவித்துள்ளது.

அதற்கு முன்னதாக மூன்று தமிழ் வர்த்தகர்களை கருணா கும்பல் கடத்திச் சென்று பணம் பறித்துக் கொண்ட பின்னர் விடுவித்துள்ளது. அந்த மூன்று வர்த்தகர்களும் மொத்தம் 40 மில்லியன் ரூபா பிணைத் தொகை செலுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மேலும் 93 அகதிகள் தமிழகத்துக்கு!

இராமேஸ்வரம் —

இராமேஸ்வரம் அருகே தனுஷ்கோடி - பாம்பன் கடற்கரைப் பகுதியை 93 ஈழ அகதிகள் நேற்றுமுன்தினம் சென்றடைந்தனர்.

மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய பகுதிகளிலிருந்து 32 குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆண்கள், 33 பெண்கள்,15 ஆண் குழந்தைகள்,9 பெண் குழந்தைகள் என 93 பேர் கண்ணாடி இழைப் படகுகளில் தனுஷ்கோடி - அரிச்சல் முனை கடற்கரைப் பகுதியைச் சென்றடைந்தனர். அவர்கள் படகுக் கட்டணமாக தலா 10 ஆயிரம் ரூபா செலுத்தி வந்ததாகத் தெரிவித்தனர். இவர்களை பொலிஸார் மண்டபம் அகதிமுகாமுக்கு அனுப்பி வைத்தனர்.

மனோகரா
யாழ்ப்பாணம்
மூன்றாவது வெற்றி வாரம்
ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த
திருட்டு பயலே
(புதிய வெளியீடு)
காட்சி நேரம் 10.30,2.30,6.30.

ராஜா யாழ்ப்பாணம்
கரண் சாதனா மற்றும் பலர் நடித்த


கொக்கி
(புதிய வெளியீடு)
காட்சி நேரம் : 10.30, 2.30 மட்டும்

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
ஓம்பின் அமைந்தார் பிரிவுஓம்பல் மற்றுஅவர்
நீங்கின் அரிதால் புணர்வு.
- திருக்குறள்

## நமது நோக்கு

# கடற்படையின் குரூரம்!

மன்னாரில் நீச்சல் தெரியாத முஸ்லிம் மீனவர் ஒருவரை கடற்படையினர் கடலில் தூக்கி வீசிய சம்பவமும் -

காங்கேசன்துறைக்குக் கிழக்கே மீனவர்களின் படகு ஒன்றைத் தாக்கி அழித்துவிட்டு புலிகளின் படகை அழித்ததாக கடற்படை கூறிய சம்பவமும் - அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றன.

கடற்படையினர் தமிழ் மீனவர்கள் மீது கொடூரமான வன்முறைகளையும், தாக்குதல்களையும் கடந்த இரண்டு தசாப்தங்களாகவே மேற்கொண்டு வருகின்றனர்.

பல நூற்றுக் கணக்கான மீனவர்களின் இரத்தம் எமது கடலில் கலந்து போயிருக்கிறது. அதைவிட, கடலில் காணாமற்போனவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கின்றனர்.

கடல் வலயத் தடைச் சட்டம் என்ற பெயரில் தமிழ் மக்களின் கடல்சார் பொருளாதார வளர்ச்சியைத் தடுப்பதற்கு நினைத்த பேரினவாத அரசு கடற்படை மூலமாக அதை நடைமுறைப்படுத்துகிறது.

கடற்படையினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தி வடக்கு - கிழக்கு கடற்பகுதியை ரண களமாக்கியது கடந்த வரலாறு.

அந்த வரலாறுதான் இப்போது மீண்டும் உயிர் பெற்றிருக்கிறது. போர் நிறுத்தம் என்பது படிப்படியாக வலுவிழந்து வரும் நிலையில் வடக்கு - கிழக்கு கடற்பகுதியில் மீனவர்கள் மீதான நெருக்கடிகள், தாக்குதல்கள் கடற்படையினரால் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது.

காங்கேசன்துறைக்கு கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகுகளைத் தாக்கி அழித்துவிட்டு - எவ்வளவு அற்புதமான பொய் மூட்டையை அரச படைகள் அவிழ்த்து விட்டிருக்கின்றன.

இராணுவத்தினரின் அனுமதி பெற்றுச் சென்ற மீனவர்களின் படகைத் தாக்கி விட்டு - கடற்புலிகளுடன் மோதல் நடத்தியதாக வேறு கதை விட்டிருக்கிறது கடற்படை.

இப்படி எத்தனை சம்பவங்கள் கடலில் நடந்திருக்கின்றன? இதையெல்லாம் இலங்கை அரசுக்கு உதவும் நாடுகள், சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கண்டுகொள்வதில்லை.

நீச்சல் தெரியாத மீனவரை கடலில் வீசிச் சென்றிருக்கும் கடற்படையினரின் கண்களில் எந்தளவு குரூரம் நிறைந்திருக்கிறது என்பதை உணர முடிகிறது.

இப்படியிருக்க அல்லைப்பிட்டி, வங்காலை, பேசாலை சம்பவங்களுக்கும் தமது படைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அவர்கள் ஒழுக்கக் கட்டுப்பாடு நிறைந்தவர்கள் - இப்படியெல்லாம் கீழ்த் தரமாக நடந்து கொள்ள மாட்டார்கள் என்று வக்காளத்துவாங்க அரசாங்கத்தால் எப்படித்தான் முடிகிறதோ தெரியவில்லை.


தமிழ் மக்களின் வாழ்வியலையும், பொருளாதாரத்தையும் சிதைத்துவிடவேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருக்கிறது. இதற்காகவே படைகளின் வன்முறைகளைக் கண்டும் காணாமல் விடப்படுவதுடன் அவற்றை மூடிமறைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

மீனவர்களின் மீது கொடூரமான தாக்குதல்களை நடத்தி அவர்களின் வாழ்வையும், தொழிலையும் சிதைத்ததன் விளைவுதான் இன்று கடலில் புலிகள் விஸ்வரூபமெடுத்து - கடலாதிக்கத்தைப் பெறுவதற்கு உந்து சக்தியாக இருக்கிறது.

இதனைப் படிப்பினையாகக் கொள்ளாமல் மீண்டும் மீண்டும் மீனவர்களைக் கடற்படையினர் துன்புறுத்தி, தாக்கி வருவது மேலும் அபாயகரமான சூழலுக்கே கொண்டுசெல்லும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# இராணுவம் எவ்வாறு பலவீனமடைந்துள்ளது?

இராணுவத்தின் தலைமை நிலையிலிருந்து கீழ்நிலை வரை எப்படியாகப் பலவீனம் அடைந்திருக்கிறது என்று கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்று அம்பலப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையில் வெளியான கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது -

இராணுவத்தின் பிரதித் தலைமை அதிகாரி லெப்.ஜெனரல் பரமி குலதுங்க கொல்லப்பட்ட பின்னர், கொழும்பு நகரின் பாதுகாப்பு ஏற்பாடுகளை புலனாய்வுத்துறை மறு ஆய்வுக்குட்படுத்தி புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

வர்த்தக நிறுவனங்களில் பெருமளவிலான தமிழீழ விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது. கொழும்பு நகரின் பாரிய பாதுகாப்பு குறைபாடுகளால் கொழும்பில் எந்த ஒரு தாக்குதலையும் தமிழீழ விடுதலைப் புலிகளால் நடத்த முடியும் என்றும் புலனாய்வுத்துறை அறிக்கை எச்சரித் துள்ளது.

யுத்தம் வெடித்தால், ஏற்கனவே கொழும்பு நகரில் உள்ள விடுதலைப் புலிகள் வழமை போல முக்கிய பிரமுகர்கள் மற்றும் முக்கிய நிலைகள் மீது தாக்குதல் நடத்தக்கூடும். இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது கொலை முயற்சித் தாக்குதல் நடத்தப்பட்டு அவர் காயங்களுடன் உயிர் தப்பிய நிலையில் - இரு மாதங்கள் கழித்து இராணுவத்தின் மூன்றாம் நிலை தளபதியான லெப்.ஜெனரல் பரமி குலதுங்க மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளின் படுகொலைகளுக்கான எதிர்வினையாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

பெயர் வெளியிட விரும்பாத முன்னாள் இராணுவத் தளபதி ஒருவர் கூறுகையில் -

மேஜர் ஜெனரல் பொறுப்பில் உள்ளவர் - பிரதித் தளபதியான இருந்தவர் மீதான இந்தத் தாக்குதல்கள் மூலம் இராணுவத்தின் எந்த ஒரு உயர் அதிகாரியையும் தங்களால் தாக்க முடியும் என்ற கடுமையான செய்தியை அரசாங்கத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அனுப்பியுள்ளனர்.

சரத் பொன்சேகா தாக்கப்பட்ட இரு மாதங்களில் நடத்தப்பட்டிருக்கும் இந்தத் தாக்குதல் மூலம் இராணுவத்தினரது மன உறுதியைச் சீர்குலைக்கமுடியும் என் றும் விடுதலைப் புலிகள் அறிந்துள்ளனர் என்றார்.

பரமி குலதுங்க கொல்லப்பட்டதையடுத்து இராணுவத்தின் தலைமை நிலையில் பாரிய வெற்றிடம் ஏற்பட்டிருக்கிறது. மிகவும் அதி நவீனமாக உள்ள பயங்கரவாத இயக்கத்தை எதிர்த்து நிற்கவேண்டிய நிலையில் - அரசாங்கத்தின் இராணுவத் தளபதியோ எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளார். மூன்றாம் நிலை தளபதியோ கொல்லப்பட்டு விட்டார். இரண்டாம் நிலைத் தளபதியான மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சியோ சில மாதங்களில் ஓய்வு பெறவுள்ளார்.

பாதுகாப்பு நிலைமைகளோ சீர்குலைந்தும் இராணுவத் தலைமையிலோ நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், மேலும் பல மூத்த இராணுவ அதிகாரிகள் தங்களது ஓய்வு காலத்துக்கு முன்னமே ஓய்வு பெற விண்ணப்பித்துள்ளதாகவும் பெயர் வெளியிட விரும்பாத முன்னாள் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

யாழ்ப்பாண இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் பி.சந்திரவன்ச ஏற்கனவே தனது விலகல் கடிதத்தை அனுப்பிவிட்டார்.

கொழும்பு கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சந்திரவன்ச, சரத் பொன் சேகாவால் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டார். திறமை வாய்ந்த இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் சந்திரவன்சவுக்கு சில மாதங்களில் 51 வயதாகிறது.

நேற்று முன்தினம் (ஜூன் 30) முதல் 3 மாத காலத்துக்கு அவர் விடுப்பில் செல்கிறார். இந்த மூன்று மாத கால ஓய்வுக் குப் பின்னர் மேஜர் ஜெனரல் சந்திரவன்ச ஓய்வு பெறவுள்ளார்.

இராணுவத்தின் கடந்த சில மாத கால செயற்பாடுகளின் மீது அதிருப்தியடைந்திருப்பதால் இராணுவத்திலிருந்து அதிகாரிகள் விலகுவதாகத் தெரிகிறது.

இராணுவத்தில் முறைப்படுத்தப்படாத பாதுகாப்பு மற்றும் முரண்பாடான இடமாற்றங்களைச் சுட்டிக்காட்டும் இராணுவ உயர் அதிகாரிகள் இத்தகைய நிலைமைகளால் தாங்களும் விரைவில் விலகிச் செல் லக்கூடும் என்று கூறுகின்றனர். இரு மாத கால இடைவெளியில் நடத்தப்பட்டிருக்கும் இரண்டு தற்கொலைத் தாக்குதல்களானது - பாதுகாப்பு தொடர் வலைப்பின்னலின் பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

உண்மையிலேயே விடுதலைப் புலிகள் மேலதிக தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த விரும்பினாலும் தடுத்து நிறுத்துவது என்பது ஆச்சரியத்துக்குரியது.

கடந்த வாரம் வெலிஓயாப் பகுதியில் கல்யாணபுர முன்னரங்க காவலரணில் பணிபுரியும் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரை இராணுவப் பொலிஸார் கைது செய்தனர். அவர் விடுதலைப் புலிகளுடன் செய்மதி தொலைபேசியூடாக தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவலரண் பகுதிக்கு அந்த நபர் அடிக்கடி சென்று வருவதாக அவரைக் கண்காணித்த சக இராணுவத்தினர் கொடுத்த தகவலுக்கமைய இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட அந்த இராணுவத்தினரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் முதலில் அவர் நிலையற்றவராக பைத்தியம் போல் பாசாங்கு செய்துள்ளார்.

அதன் பின்னர் நடத்தப்பட்ட கடும் விசாரணைகளில் மேலும் 5 படையினருக்கும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பிருப்பதாகவும், தாங்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவினால் அவர்கள் பணம் தருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊதியப் பட்டியலில் சில உயர் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட 45 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இடம்பெற்றிருப்பதாக இரு வாரங்களுக்கு முன்னதாக பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியானது.

இது தொடர்பாக சிறப்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களக் குழுவினர் விசாரணைக்காக நியமிக்கப்பட்டுள்ளனர். கல்யாணபுர முன்னரங்க காவலரணில் கைது செய்யப்பட்ட நபர் ஏற்கனவே குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர்

# கிரிக்கெட் சபை தேர்தலில் போட்டியிடுவதற்கு தடை!

கொழும்பு —

கிரிக்கெட் சபை தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ளோர் போட்டியிடக்கூடாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தடை விதித்துள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி இந்த தேர்தல் நடைபெறவுள்ளது. ஜனாதிபதி மகிந்தவின் இந்த உத்தரவு மூலம் தர்மதாஸ மீண்டும் தலைவராகும் வாய்ப்பு உள்ளது.

தர்மதாஸவுக்கு எதிரணியில் உள்ள முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால, சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவை சந்தித்துப் பேசியுள்ளார். தர்மதாஸவின் எதிரணியினர் அனுரா பண்டாரநாயக்கவை நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றனர்.



பரமி குலதுங்க



சரத் பொன்சேகா

# நிழற் போரின் அவலத்தை சந்தித்துக் கொண்டிருக்கும் அரசு!

கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி இராணுவத் தலைமையகத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பும் இந்த வார ஆரம்பத்தில் பன்னிப்பிட்டியவில் நிகழ்ந்த குண்டு வெடிப்புமாக கடந்த இரு மாதங்களில் நிகழ்ந்த இரு குண்டுவெடிப்புக்கள் இலங்கையின் தலைநகரை உலுக்கியுள் ளன.

இராணுவத் தளபதியின் மீதான குண்டுத் தாக்குதலின் பின்பு அவர் பணியிலிருந்து அகற்றப்பட, மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி தற்காலிகமாக இராணுவத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அதற்கு அடுத்த நிலையிலிருந்தவர் தான் மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க.

கடந்த திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க பன்னிப்பிட்டியாவில் உள்ள அவரது இல்லத்திலி ருந்து இராணுவத் தலைமையகம் நோக்கி பிரான்ஸ் நாட்டு தயாரிப்பான சில்வர் நிற பேஜோ(Peugeot 406) காரில் புறப்பட்டார். இவரின் காரைத் தொடர்ந்து மிற்சுபிசி பிக்கப் வாகனத்தில் பாது காவலர்களும் சென்றார்கள்.

இந்தத் தொடரணி சிறிது தூரம் ஹைலெவல் வீதியால் சென்று தேவுராம் விகாரை வீதிக்குத் திரும்ப முற்பட்ட போது பின்பக்கமாக இருந்து வந்த மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு பிரிவினரின் வாகனத் தைக் கடந்து சென்று ஜெனரலின் காருடன் பின்புறமாக மோதியது. இதன் பின்னர்பாரிய வெடியோசையோடு கார் சின்னா பின்னமா கியதுடன் தீப்பற்றிக் கொண்டது.

பாதுகாப்புக்குச் சென்ற வாகனமும் பலத்த சேதமடைந்தது. எல்லாம் ஒரு கணப் பொழுதில் நிகழ்ந்து முடிந்துவிட்டது. உதவிக் குக் கூட உடனடியாக யாரும் இல்லை. தனது பிள்ளைகளைப் பாடசாலையில் இறக்கி விட்டு வீடு திரும்பிய ஒரு பெண்மணியே சம்பவத்தை பாதுகாப்புத் தரப்புக்கு தெரியப் படுத்தியதுடன், காயமடைந்தவர்களையும் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். குலதுங்கவும், அவருடன் பயணித்த மெய்ப்பாதுகாவலரும், இராணுவ சாரதி ஆகியோர் அந்த இடத்திலேயே பலியாக பிக்கப் வாகனத்தில் வந்த பாதுகாவலர்கள் படுகாயமடைந்தார்கள்.

1992 ஆம் ஆண்டில் கொழும்பின் பிரதான மையப்பகுதியான காலி முகத்திடலில் அப்போதைய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார் சைக்கிள் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் இடம்பெற்ற அதே பாணியிலான தாக்குதல் இதுவாகும்.

யார் இந்த மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க? இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு மிகவும் நெருக்கமான தோழன் என்பதுடன் சிங்கள இராணுவத்தின் திறமை மிக்க தளபதியுமாவார். 1992ஆம் ஆண்டில் அராலித்துறையில் உயிரை விட்ட லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடு வவுக்கு பின்பு சிங்கள இராணுவத்தினர் மத்தியில் இவருக்கு ஒரு புகழ் இருந்தது. சிங்கள இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படைப் பிரிவின் தாக்குதல் அணியில் இவரின்பங்கு மிக முக்கியமானது.

இந்த அணியினரால் இந்த வருட ஆரம்பம் முதல் இதுவரை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் 26 கிளைமோர்த் தாக்குதல்கள் நடத்தப்பட் டுள்ளன. 42 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். இதில் பெரும்பாலானவர்கள் அப்பாவிப் பொதுமக்களாவர். இதன் பின்னணியின் நாயகன் தான் இப்போது பலியாகியுள்ளார். வழமையாக இப்படிப்பட்ட தாக்குதல்களின் பின் அப்பாவி தமிழ் மக்களின் மீது விமானம் மூலம் கண்மூடித்தனமாக குண்டுகள் வீசும் சிங்கள அரசு ஏன் இம்முறை வீசவில்லை?

அடுத்தடுத்து நடைபெற்ற அரசியல், இராணுவப் பின்னடைவுகள் சிங்கள அரசை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன.

அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்க உதவும் என உலகில் பிரசாரம் மேற் கொள்ளப்பட்டு புலிகள் மீது கொண்டுவரப் பட்ட தடைகள் எதிர்விளைவையே கொடுத்துள்ளன. இது சர்வதேசத்திலும் மெல்ல, மெல்ல அம்பலமாகிக் கொண்டு வருவதுடன், உலக நாடுகளும் அதை உணரத் தலைப்பட்டுள்ளன.

ஜே.வி.பி.யின் அழுத்தத்தால் நோர்வேயின் பங்களிப்பைக் குறைப் பதற்காக நோர்வே நாட்டு கண்காணிப் புக்குழுத் தலைவரை சிங்கள அரசு வெளியேற்றியது. ஆனால், இப்போது முழுக்க முழுக்க நோர்வேயே கண் காணிப்பு பணியை செய்ய வேண்டிய நிலைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தடை வழிசமைத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர் களை வெளியேற்ற விடுதலைப் புலிகள் எடுத்துள்ள முடிவை எவரும் குறைகூற முடியாது. ஏனெனில், 2002ஆம் ஆண்டில் போர் நிறுத்தம் ஏற்பட்டு பேச்சுக்கள் ஆரம்பித்த போது பேச்சுக்களை இந்தியாவில் வைக்க வும், இந்தியாவை அமைதி முயற்சிகளில் இணைக்கவும் விடுதலைப் புலிகள் விரும் பினார்கள். இதற்கு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் உடல் நலக்குறைவும் ஒரு காரணம். இந்தியாவில் பேச்சுக்கள் நடைபெற்றால் அவர் மருத்துவ வசதிகள் பெறுவது வசதியானது. ஆனால், விடுதலைப் புலிகளை தடைசெய்துள்ள நாட்டில் பேச்சுக்கு அனுமதிக்க முடியாது என இந்தியா மறுத்து விட்டது. எனவே, தடை செய்யப்பட்ட நாடுக ளின் பிரதிநிதிகள் எப்படி கண்காணிப்புப் பணியைச் செய்ய முடியும்?

ஒவ்வொரு தாக்குதலின் பின்பும் அரசினால் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்கள் சர்வதேசத்தில் அரசு மீது அதிக கண்டனங்களை ஏற்படுத்தி இருந்தன. 6ஆயிரம் மீற்றருக்கு மேலே நின்று இலக்கின்றி வீசப்படும் குண்டுகள் அப்பாவி மக்களையே அதிகம் பாதித்ததுடன், விடுதலைப் புலிகளையும் சினமடைய வைத்தது. மீண்டும் ஒரு விமானக் குண்டு தமிழர் தாயகத்தில் நடத்தப்படுமாயின் அதை ஒரு முழுமையான போர் எனக் கருதி தக்க பதிலடி தரப்படும் என இறுதியாக நிகழ்ந்த குண்டுவீச்சின் பின் விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர்.

அரசைப் பொறுத்தவரை தன்னந் தனியாக நின்று ஒரு முழுமையான போரை எதிர்கொள்ளத் தயாரில்லை. எனவே தான் சர்வதேசத் தடைகள் மூலம் புலிகளை பயங்கரவாதிகளாக உலகுக்கு காண்பித்து இராணுவ உதவியைப் பெற முனைந்தது. ஆனால், அது நிறைவேறாத நிலையில் எப்படி போருக்குப் போவார்கள்?

ஏப்ரலில் நடந்த குண்டுவெடிப்பு, பன்னிப் பிட்டிய குண்டுவெடிப்பு என்பன அரசின் புலனாய்வுத்துறையின் செயற்திறன் பற்றிய கேள்வியை சிங்கள மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது. புலனாய்வுத்துறை என்பது ஒரு தாக்குதல் நடைபெற முன்பு கண்டறிந்து தடுப்பது. தாக்குதல் நடைபெற்ற பின்னர், தாக்குதல் நடத்தியவர்களைக் கண்டுபிடிப்பது பொலிஸ் குற்றத்தடுப்பு பணியகத் தின் வேலை. சிங்கள அரசின் புலனாய்வுத் துறையை பொறுத்தவரை தற்போது பொலிஸ் பணியையே அது செய்து கொண்டிருக்கிறது.

தலைநகர பாதுகாப்பில் விழுந்த ஓட்டையானது அரசை மிகப் பெரும் கலக்கமடைய வைத்துள்ளது. முழுக்க முழுக்க சிங்களப் பிரதேசமான பன்னிப் பிட்டியவில் நிகழ்ந்த தாக்குதல், இரும்புக் கோட்டையென நம்பப்பட்ட இராணுவத் தலைமையகத்துள் நடந்த தாக்குதல், கடந்த வாரம் வத்தளைப் பிரதேசத்தில் கைப்பற்றப் பட்ட காந்தப்புல இணைப்பிகளைக் கொண்ட மிக நவீன கடல் கண்ணிவெடிகள், அதனுடன் தொடர்புடைய சிங்கள இனத்தவர்கள் என்பன அரசு சற்றும் எதிர்பார்க்காதவை.



ஒரு நகரத்தின் பாதுகாப்பை அங்குள்ள படையினரின் எண்ணிக்கை, அங்கு வாழும் மக்கள், வந்து செல்லும் மக்கள், நகரத்தின் நுழைவாயில்களின் பாதுகாப்பு ஒழுங்குகள், அரச புலனாய்வுத்துறையின் வலிமை ஆகியவற்றைக் கொண்டு தீர்மானிக்க லாம். ஆனால், செயலிழந்து போன புலனாய் வுத்துறையையும், கண்ணுக்குத் தெரியாத கரும்புலிகளையும், கெரில்லா போர்முறை யையும் கொண்டு எப்படி அரசால் நகரத்தின் பாதுகாப்பு வலிமையைத் தீர்மானிக்க முடியும்?

1 லட்சத்து 20ஆயிரம் இராணுவம், அதன் இராணுவத் தளபாடங்கள், விமானப்படை, கடற்படை அவற்றின் கலங்கள் மற்றும் ஆயுதங்கள் மூலம் அரசின் பலத்தை சுலப மாக மதிப்பிட முடியும். ஆனால், மக்கள் படையின் கட்டுமானப் பயிற்சிகளும், கரும்புலிகளும் விடுதலைப் புலிகளின் பலத்தை அரசினால் கணிப்பிட முடியாதபடி செய்துள்ளன. உதாரணமாக - அரசு 10 போர் விமானங்களை வாங்கினால் அதன் தாக்கம் எவ்வளவு என அண்ணள வாக கணிப்பிடலாம். ஆனால், விடுதலைப் புலிகளின் பாசறையில் இருந்து 10 கரும்புலிகள் உருவாகினால் அதன் தாக்கத் தைக் கணிப்பிட முடியாது. இதன் வெளிப்பாடு தான் அரச படைகளின் அண்மைய இழப்புக்கள் என்பது நிதர்சனம்.

பன்னிப்பிட்டியவில் வெடித்த குண்டின் தன்மையானது அண்மையில் அரசால் ஒவ்வொன்றும் 1 லட்சத்து 30ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதிக்குக் கொள்வனவு செய்யப்பட்ட குண்டு துளைக்காத BMW பென்ஸ் கார்களின் பாதுகாப்புத் தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது. 7.62 மி.மீ துப்பாக்கி ரவைக்கு தாக்குப்பிடிக்கும் போரோன் காபைட்(Boron carbide-B4C) கண்ணாடி இழைகளினால் உருவாக்கப்பட்ட இந்தவகை கார்கள் பன்னிப்பிட்டியவில் நிகழ்ந்தது போன்ற ஒரு குண்டுத் தாக்குதலுக்குத் தாக்குப் பிடிக்குமா? பன்னிப்பிட்டிய வீதியில் கிடந்த Peugeot. 406 காரின் எலும்புக் கூடான உருக்குலைந்த தோற்றம் தாக்குதலாளி குண்டு துளைக்காத காரையும் எதிர்பார்த்து வந்ததாகவே தெரிகிறது.

அரசின் பொருளாதாரத்தைப் பொறுத்த வரை மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பு, உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவு, திருப்தியற்ற உதவி வழங்கும் நாடுகள், தயங்கும் சர்வதேச முதலீட்டாளர்கள், இலங் கையைத் தவிர்க்கும் உல்லாசப் பயணிகள், அடிக்கடி சரிந்து விழும் பங்குச் சந்தை என பாதாளத்துக்கே சென்று கொண்டிருக்கிறது. இதன் வெளிப்பாடாக இந்த மாதம் இலங்கை யில் அமெரிக்க டொலரின் பெறுமதி 1.5 வீதம் உயர்ந்துள்ளதுடன் நாணயமாற்று வீதமும் தளம்பல் நிலையிலேயே உள்ளது.

இவை எல்லாவற்றினதும் மொத்த வடிவமாக தெற்கில் மகிந்தவின் அரசியல் பலம் சரிவைச் சந்தித்துள்ளது. பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி பெரும்பான்மை. அரசை அமைக்கும் கனவில் இருந்த மகிந்தவுக்கு இவை எல்லாம் பேரிடியாகவே அமைந்துள்ளன. பலவீனமான அரசியல், இராணுவ நிலையில் உள்ள மகிந்த எப்படி ஒரு முழுமையான போரை தொடங்குவார்? கருணா என்ற மாயையை நம்பி தவறான கணிப்புக்களுடன் அரசால் தொடங்கப்பட்ட நிழற்போரை நினைத்து அரசு தற்போது வருந்தக்கூடும். ஆனால், அதற்குரிய பலனைத் தான் தற்போது அரசு அனுப விக்கிறது என்பது மட்டும் உண்மை.

வேல்ஸிலிருந்து
அருஸ்

நன்றி - இணையத்தளம்

# இங்கிலாந்துடனான நட்வெஸ்ற் தொடரை முழுமையாகக் கைப்பற்றியது இலங்கை!








ஹெடின்லே —

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற 5 போட்டிகளைக் கொண்ட நட்வெஸ்ற் ஒருநாள் தொடரின் ஐந்தாவதும், இறுதியுமான போட்டியில் இலங்கை 8 விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்று - தொடரை 5:0 என முழுமையாகக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. இதன்படி அந்த அணியின் ட்ரெஸ்கொதிக்கும், குக்கும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிங்கினர்.

இருவரும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். ஸ்கோர் 82 ஐத் தொட்டவேளை, 41 ஓட்டங்களைப் பெற்றிருந்த குக், மஃரூப் வீசிய பந்தை ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய பெல் 18 ஓட்டங்களை மட்டும் பெற்று - பெர்னாண்டோ வீசிய பந்தை சங்ககாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத்தொடர்ந்து அணித்தலைவர் ஸ்ரரஸ் களமிறங்கினார். அவரும் தனது பங்குக்கு 26 ஓட்டங்களைப் பெற்றவேளை, மலிங்க வீசிய பந்தை சங்ககாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் சோலங்கி களமிறங்க, சிறப்பாக ஆடி 16 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 121 ஓட்டங்களைப் பெற்றிருந்த ட்ரெஸ்கொதிக் - ஜெயசூர்ய வீசிய பந்தில் போல்டானார்.

அப்போது ஸ்கோர் 233 ஆக இருந்தது. அடுத்து டல்றிம்பிள் களமிறங்கினார். அவரும் 30 ஓட்டங்களைப் பெற்று மலிங்கவின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஜோன்ஸ் 2, பிறெஸ்னன் 4 ஓட்டங்களுடன் மலிங்கவின் பந்துகளில் எல்.பி.டபிள்யூ, போல்ட் முறைகளில் ஆட்டமிழந்தனர்.




அடுத்து பிளங்கெற் களமிறங்கினார். 50 ஓவர்கள் நிறைவில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 321 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சோலங்கி 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 44 ஓட்டங்களுடனும், பிளங்கெற் 9 ஓட்டங்களுடனும் இறுதி வரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் மலிங்க 4, பெர்னாண்டோ, மஃரூப், ஜெயசூர்ய ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 322 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய இலக்கை அணிக்கு தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய தரங்க - ஜெயசூர்ய ஜோடி நல்ல தொடக்கத்தைக் கொடுத்ததோடு, அதிரடியாக ஆடி முதல் விக்கெட்டுக்காக 286 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்தது. இதுவே இலங்கை அணியின் வெற்றியை மிகவும் இலகுவாக்கியது.

ஸ்கோர் 286 ஐத் தொட்டபோது முதலாவது விக்கெட்டாக 14 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 109 ஓட்டங்களைப் பெற்றிருந்த தரங்க, டல்றிம்பிள் வீசிய பந்தை அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜெயவர்த்தன களமிறங்க, 99 பந்துகளில் 20 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 152 ஓட்டங்களை விளாசிய அதிரடிப்புயல் ஜெயசூர்ய, சோலங்கி வீசிய பந்தை ஸ்ரரஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய சங்ககார, அணித்தலைவர் ஜெயவர்த்தனவுடன் இணைந்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இலங்கை அணி 37.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 324 ஓட்டங்களைப் பெற்றதனால், 8 விக்கெட்டுக்களால் அபார வெற்றியைப் பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரை 5:0 என்ற அடிப்படையில் இலங்கை அணி வரலாறு காணாத வெற்றியைப் பெற்று சாதனை படைத்தது.

ஆடுகளத்தில் ஜெயவர்த்தன 12, சங்ககார 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர். இந்த ஆட்டத்தின் நாயகனாகவும், தொடர் நாயகனாகவும் ஜெயசூர்ய தெரிவானார்.

# தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து முழக்கமிட்டால் இந்திய அரசு இலங்கை விவகாரத்தில் தலையிடும்

## கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தன்



யாழ்ப்பாணம் —

தமிழக முதல்வர் கருணாநிதி தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளையும் இணைத்து ஈழத்தமிழர் விவகாரத்தில் தலையிடுமாறு இந்திய அரசை வலியுறுத்தினால் அதற்கு இந்திய அரசு செவிசாய்க்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பிரகடனம் செய்யாத போரை இலங்கை அரசு இன்று தொடுத்துள்ளது. தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் சிறியளவிலும், பெரியளவிலும் தாக்குதல்களை அரசு நடத்துகிறது.

நூற்றுக்கணக்கில் உயிரிழப்புகளும், கோடிக்கணக்கில் உடமை இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. வதிவிடங்கள் தரைமட்டமாக்கப்பட்ட நிலையில் - எங்கு தஞ்சம் புகுவது என்று தெரியாது மக்கள் தத்தளிக்கின்றனர். தத்தளிக்கும் மக்களின் எண்ணிக்கை 6 இலட்சத்தைத் தாண்டி விட்டது. 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அடிப்படை வசதியற்ற நிலையில் தஞ்சம் புகுந்து முகாம் வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளனர். முன்னைய போர்களால் இங்கு வாழமுடியாது தமிழகத்தில் தஞ்சம் புகுந்த மக்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியுள்ளது. தமிழகத்துக்கோ, இந்தியாவுக்கோ சுமையாக இருக்க நாம் விரும்பவில்லை. ஆனால் இங்கு குண்டு மழை பொழிகின்ற போது, எமது மக்கள் சாகடிக்கப்படுகின்ற போது, பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படும்போது, பச்சிளம் குழந்தைகள், பால் மணம் மாறாத குழந்தைகள் சித்திரவதைக்கு ஆளாக்கப்படும்போது மக்கள் என்ன செய்ய முடியும்? எப்படியாவது தப்பிப் பிழைப்போம் என வள்ளங்களில் ஏறி தமிழகம் வரமுயன்ற சிலர் தம் வள்ளங்கள் கவிழ்ந்த நிலையில் இந்து சமுத்திரம் அவர்களை இறுக அணைத்தது.

ஐந்து தமிழ் இளைஞர்களை முழங்காலில் நிறுத்தி துடிதுடிக்க வாய்க்குள் துப்பாக்கியால் சுட்ட கொடூரத்தை இரக்கத்தின் வடிவான இயேசு கூட மன்னிப்பாரா? இவை அனைத்தையும் நினைவு கொண்டுதான் அரசின் பொறுப்பற்ற போக்கால் மக்கள் அல்லற்படுகின்றனர்.

இலங்கையில் மனித உரிமைகள் முற்றாக மீறப்படுகின்றன என்று சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்துள்ள காட்டமான அறிக்கையில் பேசாலை தேவாலயத்தில் ஒரு பெண்மணி உயிரிழக்க 44 பேர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். இதனை அரச படைகள் தான் செய்துள்ளன என்று மன்னிப்புச்சபை தெட்டத் தெளிவாக எடுத்துரைத்துள்ளது.

இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள யாழ்.குடாநாட்டில் மட்டும் கடந்த டிசெம்பர் மாதம் முதல் காணாமற் போனோர் எண்ணிக்கை 160 பேரைத் தாண்டியுள்ளது.

மலையக மக்களை நாம் விட்டு வைக்கப்போவதில்லை என்று கூறும் முறையில் இரத்தினபுரி-எகலியகொட பகுதியில் பம்பேகமுவ தோட்டத்தில் வசிக்கும் தமிழ் மக்களின் வீடுகள் சிங்களவர்களால் தாக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், அரசின் அரவணைப்பில் அளவற்ற ஆனந்தம் காணும் மலையகத் தமிழ்த் தலைவர்கள் இது வரை ஏதும் வாய்திறந்து பேசியதாக நாம் அறியோம்.

இவற்றையெல்லாம் நன்கு அறிந்த நிலையில் தான் தமிழ்நாட்டில் ஈழத்தமிழ் உணர்வாளர் வீரமணி இலங்கைக்கான இந்திய இராணுவ உதவிகளைத் தடுக்கக்கோரி இந்தியத் தலைமை அரசு மன்மோகன் சிங்குக்கு அனைத்துத் தமிழ் அமைப்புகளும் கடிதங்களை அனுப்புமாறு கோரியுள்ளார்.

அதேவேளையில் - இந்தியா இலங்கைக்கு ராடர் கருவிகளை வழங்கியதாக ஊடகங்களில் வெளியான செய்தி தமக்கு அதிர்ச்சியளிப்பதாக பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டொக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இனிமேல் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா எத்தகைய நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் தமிழக அரசுடனும், தமிழக அரசியல் கட்சித்தலைவர்களுடனும் கலந்து பேசி அவர்களின் ஒருமித்த ஆலோசனைக்கேற்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ராமதாஸ் கோரியுள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவனும் எந்தநிலையிலும் இந்திய அரசு தமிழினத்தை அழித்தொழிக்கும் சிங்கள அரசுக்கு துணை போகக்கூடாது என்று எச்சரித்துள்ள கருத்து புதுடெல்கி அரசை சிந்திக்க வைக்கவேண்டும்.

ஈழத்தமிழினத்துக்காக அன்றும் இன்றும் எமக்காக குரல் எழுப்பும் தமிழ்த்தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் சிங்களத் தலைவர்களை திருப்திப்படுத்தும் நோக்குடன் ஈடுத்தமிழ் மக்களுக்கு மாறாக இந்தியா செயற்படக்கூடாது என்று மொழிந்துள்ள கருத்துக்கள் ஆழம்மிக்கவை.

தமிழகத்து முதல்வராகிய கலைஞர் மு.கருணாநிதி தமிழகத்தின் அனைத்து கட்சிகளின் ஆதரவோடு குரலெழுப்பி அவர் குரலுக்கு புதுடெல்கி செவிசாய்ப்பது உறுதி. தமிழகத்தின் திரண்ட கருத்தை புதுடெல்கி தட்டிக்கழிக்க முடியாது.

கலைஞர் கட்டளையிடின் தமிழகம் அந்தக்கட்டளைக்கு அடிபணிந்து ஈழத்தமிழ் மக்களுக்காக ஒன்றுபட்டு குரல் எழுப்புவது உறுதி.

தமிழகத்தின் குரல் 6 கோடித் தமிழ் மக்களின் குரலாகும். 6 கோடி மக்களின் குரலை புதுடெல்கி எப்படிப் புறக்கணிக்க முடியும்.

ஆகவே, தமிழக முதல்வர் ஈழத் தமிழ் மக்களுக்காக - கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் என்ற விவிலியக் கூற்றில் முழுநம்பிக்கை வைத்து ஈழத்தமிழ் மக்களை காப்பாற்றுவாராக.

இந்த ஒரு நிகழ்ச்சியே வரலாற்றில் அவர் தனியிடம் பெறுவதற்கு வழிவகுக்கும். எமது எதிர்பார்ப்புக்குக் கலைஞர் ஈடுகொடுப்பார் என்பதே எமது முழு எதிர்பார்ப்பாகும்.


3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வேலன் ஐயம்பிள்ளை



பிறப்பு : 05.04.1933

இறப்பு : 07.07.2003

அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
தாங்கள் எங்கள் நல்வாழ்விற்கு
உங்களை அர்ப்பணித்து வாழ்ந்தீர்கள்

தில்லையம்பதி,
கோண்டாவில்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

[2311]

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பணிப் புறக்கணிப்பு...

இடைநிறுத்தப்பட்டிருந்தது.

ஆனாலும் தொடர்ச்சியான இராணுவ வெறியாட்டம் இடம்பெற்று வந்தது. அதன் உச்சக்கட்டமாக மாவீரர் துயிலும் இல்லங்கள், மாவீரர் நினைவுத் தூபிகள் போன்றவற்றை இடித்தழிக்கும் காடைத்தனத்தை ஆரம்பித்துவிட்டது.

அரச கைக்கூலிப்படைகள், அவர்களுடன் இணைந்து எமது இனத்தைக் காட்டிக் கொடுத்து உயிர் வாழும் ஈ.பி.டி.பி ஒட்டுக்குழுவினரும், தமது தமிழின விரோதச் செயல்களை தீவிரப்படுத்த இருந்த சூழலில் - குடாநாட்டில் வாழும் எமது மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை, சிங்களப் படைகளின் காடைத்தனங்களை வெளிப்படுத்துவதற்காக கடந்த வாரம் தொடக்கம் மீண்டும் நாம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தோம்.

தமது அராஜகங்களுக்கெதிராக மக்கள் எதையும் செய்யக்கூடாதென விரும்பிய ஆக்கிரமிப்புப் படைகள் இந்தப் போராட்டத்தை குழப்ப உச்சக்கட்ட முயற்சிகளில் இறங்கினர். கொலைப்பயமுறுத்தல், பணிஇடைநிறுத்தம் என தமக்கு தெரிந்த வகையில் எல்லாம். எம்மை மிரட்ட முற்பட்டனர். ஆனால் எமது மக்கள் இவை எதற்கும் அடிபணியாமல் எதிரிக்கு எதிராக போராட வேண்டும் என்பதில் திடமாகவே செயற்பட்டு வந்தனர்.

இந்த நிலையில், எமது எதிர்கால சந்ததியினரை உயர்த்தி வளர்க்கப் போகும் கல்விச் செயற்பாடுகள் பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். அடுத்து வரப்போகும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஆகிய பரீட்சைகளுக்கு எமது மாணவர்கள் தோற்றவேண்டிய அவசியம் இருப்பதால் எமது மக்களின் ஒட்டு மொத்தமான எதிர்ப்புகளை பரிசாக அரசுக்கும், அதன் ஆக்கிரமிப்புப் படைகளுக்கும் காட்டிவிட்டதால் -

இன்றிலிருந்து வழமை போன்று எமது அனைத்து செயற்பாடுகளையும் ஆரம்பிப்போம்.

மீண்டும் எதிரி எம்மக்கள் மீது அராஜகத்தனங்களை தொடருமானால், அரச பயங்கரவாதத்துக்கு எதிராகவும், சர்வதேச சமூகத்துக்கு தெரிவிக்கவும் மீண்டும் எமது பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பிப்போம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# படையினர் மீது...

சென்று கொண்டிருந்த இ.போ.ச பஸ்ஸை மறித்த படையினர் அதன் சாரதியைக் கடுமையாக தாக்கினர்.

மயில்வாகனம் கண்ணதாசன் என்ற சாரதி காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை - மேலும் பலர் படையினரின் தாக்குதலுக்குள்ளாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கோண்டாவில் வாமஸ் வீதியில் படையினர் மீது நேற்று மாலை கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று மாலை 5.45 மணியளவில் கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு அருகிலுள்ள இராணுவ முகாமிலிருந்து படையினர் வாமஸ் வீதியூடாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கைக்குண்டுத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் இராணுவ தரப்புக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

இதேவேளை - இந்தச் சம்பவத்தையடுத்து அந்த வீதியூடாக போக்குவரத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் படையினரால் தாக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

# வன்முறை சூழலுக்கு...

ஆயுதங்களைக் களைவதன் மூலம் அமைதிப் பேச்சுக்களுக்கு ஏற்ற புறச் சூழ்நிலையை ஏற்படுத்தும்படி நாம் மகிந்த ராஜபக்ஷவை வலியுறுத்துவோம் என்று கூறியுள்ளார்.

அண்மையில் கெப்பிற்றிக்கொலாவவில் இடம்பெற்ற பஸ் மீதான கிளைமோர் தாக்குதல் சம்பவம் பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் -

அந்தச் சம்பவத்துக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. பல ஆயுதக் குழுக்கள் இயங்குகின்றன. அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அந்த ஆயுதக் குழுக்களே மேற்கொண்டன. இதை விடுதலைப் புலிகள் சம்பவம் இடம்பெற்ற உடனே சுட்டிக்காட்டியிருந்தார்கள். அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் போய் நாங்கள் வெடிகுண்டுகளை பொருத்தி வெடிக்க வைக்க முடியாது.

ஆனால், கடந்த காலச் சம்பவங்களை கருத்திற்கொண்டு - தற்போது இடம்பெறும் சம்பவங்களில் நாம் வெளியிடும் கருத்துக்களையோ, கண்டனங்களையோ எவரும் தீவிரமாக எடுக்கவில்லை. கடந்த காலங்களில் நாம் எல்லா வகையான வன்முறைகளிலும் ஈடுபட்டிருந்தோம். அதனடிப் படையில் தற்போது எங்காவது படுகொலைகளோ அல்லது வன்முறைகளோ இடம் பெற்றால் அதற்கு நாம் தான் காரணம் என்று குற்றம் சாட்டி விடுகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.


## பணிநிலை வெற்றிடம்

**1. உதவி ஆசிரியர் -**

(செய்திப் பத்திரிகை ஒன்றில் ஆகக் குறைந்தது இரண்டு வருடங்கள் உதவி ஆசிரியராக கடமையாற்றிய அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)

**2. அலுவலக செய்தியாளர்கள் - (பயிலுனர்)**

பத்திரிகைத்துறையில் ஆர்வமுடைய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**3. ஒப்புநோக்குநர் -**

க.பொ.த சாதாரணதரத்தில் தமிழில் விசேட சித்தி பெற்றிருப்பதுடன், க.பொ.த உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாக எடுத்து தேர்ச்சி பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

தகைமையுடையவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக

**பணிநிலை வெற்றிடம்,**
**நமது ஈழநாடு,**
**267, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

-நிர்வாக இயக்குநர்.


# சனியன்று படையினர் மீது பரவலாகத் தாக்குதல்!

யாழ்ப்பாணம்—

யாழ். குடாநாட்டில் படையினர் மீது நேற்று முன்தினம் பரவலாக தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் விசேட ஊடகத் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் படையினரின் பதுங்கு குழி மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் இடம்பெற்று சுமார் 5 நிமிடங்கள் கழித்து வியாபாரி மூலையிலுள்ள படையினரின் பதுங்கு குழி ஒன்றின் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்து, நடத்தப்பட்ட தேடுதலில் வெடிக்காத நிலையிலிருந்த கிரனேட் ஒன்றை படையினர் கைப்பற்றினர்.

இதேவேளை, கைதடியில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்று முன்தினம் மாலை 2.15 மணியளவில் இரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் சிறிய ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தினர்.

படையினர் நடத்திய பதில் தாக்குதலையடுத்து அவர்கள் தப்பி ஓடிவிட்ட னர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கப்புதுவில் துப்பாக்கி படையினரால் மீட்பு!

யாழ்ப்பாணம்—

கப்புது பகுதியில் நேற்று படையினர் ரி-56 ரகத்துப்பாக்கியை கைப்பற்றியதாகவும், இதைக் கொண்டு வந்தவர்கள் படையினரைக் கண்டதும் தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக படைத்தரப்பு வெளியிட்ட தகவலில் -

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் சைக்கிள் ஒன்றில் சென்று கொண்டிருந்தவர்கள் படையினரைக் கண்டதும் தாம் கொண்டு வந்த பார்சல் ஒன்றைக் கைவிட்டு விட்டுத் தப்பிச் சென்றனர்.

இதையடுத்து படையினர் பார்சலை சோதனையிட்டபோது ரி - 56 ரக துப்பாக்கி, மகசின், 30 ரவைகள் என்பன அதிலிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னாரில் சுடப்பட்ட இளைஞர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்

மன்னார்—

மன்னார் - சிறுகண்டலில் நேற்று முன்தினம் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டவர் பருத்தித்துறையைச் சேர்ந்த இளைஞர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இளைஞர் மார்க்கண்டு பரமநாதன் என்றும் இவர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அடையாள அட்டையைக் கொண்டு அடையாளம் காணப்பட்ட இவருடைய சடலத்தை நேற்று முன்தினம் மாலை பார்வையிட்ட மன்னார் மாவட்ட நீதிபதி விசாரணைகளை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## கடத்தப்பட்டவர்...

என்ற குடும்பஸ்தரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர் ஆவார்.

மூதூர் நகர் - ஆலிம்சேனைக்நொக்ஸ் வீதியிலுள்ள விளையாட்டு மைதானத்துக்கு அருகில் இந்தச் சடலம் காணப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற மூதூர் நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா சடலத்தை பார்வையிட்ட பின்னர் உயிரிழந்தவரின் மூன்று உறவினர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவுசெய்து கொண்டார். சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டதையடுத்து சடலம் மூதூர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு கொலையாளிகளை கைது செய்யுமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## சிங்கள...

இராணுவத்தின் புலனாய்வுத்துறை சம்பந்தமாக இவர் தனது பத்திரிகையில் வெளிக்கொணர்ந்த விடயங்கள் புலனாய்வுத்துறை வட்டாரங்களை கடும் சீற்றத்துக்குள் உள்ளாக்கியிருந்தது என்றும், இதனால் இவர் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்பட்டு வந்தார் என்றும் ஆனாலும் சம்பத் எவருக்கும் அஞ்சாமல் தொடர்ந்தும் பத்திரிகைகளில் துணிச்சலாக எழுதி வந்தாரென்றும் சிங்கள ஊடக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவரது கட்டுரைகள் இருதின, லக்பிம, சத்தின ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன. இவற்றைவிட ரி.என்.எல் தொலைக் காட்சிக்கும் இவர் பணியாற்றியிருந்தார். இவரது கொலையை சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

## வெலி ஓயாவில்...

கள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கும் 7.30 மணிக்கும் இடையில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

இதையடுத்து, படையினரும் சிறிய மற்றும் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி பதில் தாக்குதல்களை மேற்கொண்டனர். இந்தச்சம்பவத்தில் இரண்டு படையினர் காயமடைந்தனரெனத் தெரிவிக்கப்படுகிறது.

## கடற்படை...

முன்வந்துள்ளது.

அதேவேளை, கடற்படைக்கு 30 மி.மீ பீரங்கிகளை கொள்வனவு செய்வது தொடர்பாக இஸ்ரேலுக்குச் சென்று கோத்தபாய ராஜபக்ஷ பேச்சுக்களை நடத்தவிருக்கிறார்.

இஸ்ரேலியத் தயாரிப்பான பீரங்கியின் விலை 3 லட்சத்து 37 ஆயிரம் டொலர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கடற்படையின் அதிவேகத்தாக்குதல் படகுகளிலுள்ள 23 மி.மீ பீரங்கிக்குப் பதிலாகவே 30 மி.மீ பீரங்கிகள் பொருத்தப்படவுள்ளன.

முதற்கட்டமாக 15 அதிவேகத் தாக்குதல் படகுகளில் இந்த 30 மி.மீ பீரங்கிகளைப் பொருத்த அரசு திட்டமிட்டுள்ளது.

காங்கேசன்துறைக்கும், திருகோணமலைக்கும் இடையில் கடல் வழிப்போக்குவரத்து நெருக்கடிக்குள்ளாகியிருப்பதால்-அவசர அவசரமாக இந்தப்பீரங்கிகளை கொள்வனவு செய்ய அரசு முடிவுசெய்துள்ளது.

## ஓட்டோ....

படுகாயமடைந்த, அதே இடத்தைச் சேர்ந்த ஜெனைற் கில்ட் (வயது - 24) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கிளைமோர் மீட்பு!

திருகோணமலை—

திருகோணமலை - தம்பலகாமம், பாரதிபுரம் பகுதியில் படையினர் 5 கிலோ எடையுள்ள கிளைமோர் குண்டொன்றைக் கைப்பற்றியிருப்பதாக இராணுவத் தரப்பு தெரிவித்தது.

டொலித்தீன்பை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த கிளைமோர் நேற்று முன்தினம் காலை 7.45 மணியளவில் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பெண் சுட்டுக்கொலை!

திருகோணமலை—

திருகோணமலை-ஆலங்கேணியில் பெண் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் ஆலங்கேணியைச் சேர்ந்த வெளிநாட்டு பயணமுகவரான எஸ்.சித்திரா (வயது 39) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

## ஓட்டோச் சாரதி துப்பாக்கிச் சூட்டில் காயம்!

கொழும்பு—

மட்டக்களப்பு - வாழைச்சேனை ரயில் நிலையத்துக்கு அருகில் ஓட்டோ சாரதி ஒருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தார்.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் -

மட்டக்களப்பு -புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை காந்தரூபன்(வயது25) என்பவரே படுகாயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியவர்கள் ஓட்டோவைக் கடத்திச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஓமந்தை சாவடியில் நால்வர் கைது !

வவுனியா—

வவுனியா - ஓமந்தை சோதனைச் சாவடியைக் கடந்து செல்ல முயன்ற நால்வர் சந்தேகத்தின் பேரில் படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை 4.45 மணியளவில் வாகனம் ஒன்றில் சென்ற நால்வரே கைது செய்யப்பட்டனர். வாகனத்தின் ஆவணங்கள் போலியானவை என காரணம் தெரிவித்தே மேற்படி நால்வரையும் படையினர் கைதுசெய்தனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைய முயன்ற இவர்கள் பொலிஸாரிடம் மேலதீக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டனர்.

## மரண அறிவித்தல்

### செல்வி நவலெட்சுமி சதாசிவம்

### ( மதுரி )

(யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, பழையமாணவி)

யாழ்ப்பாணம் இல.46 அத்தியடி புதுவீதியைச் சேர்ந்த செல்வி **நவலெட்சுமி சதாசிவம்** (மதுரி) அவர்கள் 30.06.2006 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் சதாசிவம் (ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்) நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், மகேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற ஜெயலெட்சுமி, லோகேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற தமிழசுவரன் (அர்ச்சுனா), சத்தியவாகேஸ்வரன் (லண்டன்), மங்களேஸ்வரன் (லண்டன்), திருக்கேஸ்வரன் (லண்டன்), திலகலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சித்ரா (லண்டன்), சரஸ்வதி (லண்டன்), இலக்னேஸ்வரி (லண்டன்), குகநந்தின் (லண்டன்), சாந்தினி (கொழும்பு), ஆகியோரின் மைத்துனியும், லண்டனில் வசிப்பவர்களான ஜெயலட்சுமி, அர்ச்சனா, கஸ்தூரி, சுதந்தன், பிரியந்தன், மயூரதன், கார்த்திகன், கபிலன், அர்ச்சுனா, கீர்த்தனா, விஷ்ணு ஆகியோரின் அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (03.07.2006) பிற்பகல் 2 மணியளவில் இல.180, கோவில் வீதியில் (கைலாச பிள்ளையார் கோவிலடி) உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஈமக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*முகவரி :-*
*180, கோவில் வீதி,*
*கைலாசபிள்ளையார் கோவிலடி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்
**குடும்பத்தினர்.**

(2312)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.07.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.